# ஸ்ரீ விலக்ஷணாநந்தரின் உபதேச உத்திகள்



தொகுப்பாசிரியர்
டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா

யோக ப்ரயாகா வெளியீடு

பண்ருட்டி ப. ஷண்முக முத்தையா
அருளியது

## மூலப்பிறவி மார்க்கம்

பரை அசைய பிந்து அசையும்
பிந்து அசைய குண்டனி அசையும்
குண்டனி அசைய மூலம் அசையும்
மூலம் அசைய பிராணன் அசையும்
பிராணன் அசைய சித்தம் அசையும்
சித்தம் அசைய மனம் அசையும்
மனம் அசைய இந்திரியங்கள் அசையும்
இந்திரியங்கள் அசைய இகத்திற் பிறவியதிகமாம்.

தத்

ஓம் ஸத்

ஸ்ரீ விலக்ஷணானந்தரின்

# உபதேச உத்திகள்

*தொகுப்பாசிரியர்*

டாக்டர் திருமதி **அனந்தகிருஷ்ணா**

ஸ்ரீ ஸ்வாமிகளின் 121ஆவது ஜெயந்தி
விழாவையொட்டி பிரசுரிக்கப்பட்டது.
**27-12-2015, ஞாயிற்றுக்கிழமை**

*வெளியீடு*

**யோக ப்ரயாகா**

16/12, டானியல் தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 081.
தொலைபேசி : 2245 0119 கைபேசி : 92821 04459

முதற் பதிப்பு : டிசம்பர், 2015

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராபிக்ஸ்**
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி : 2813 1102

## என்னுரை

ஞான ரஹஸ்யம் நான்கு பாகங்களைத் தொடர்ந்து ஸ்ரீ விலக்ஷணானந்த உபதேச உத்திகள் என்ற நூலை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழச்சி அடைகின்றேன். ஸ்ரீ குருநாதரின் வாக் விலாஸத்தினை எல்லோரும் இன்புறும் பொருட்டு மற்று மொரு முறை வழங்கும் வாய்ப்பினை எனக்களித்த பெருங் கருணைக்கு அவர்தம் திருவடிக் கமலத்தை சரணடைந்து பணிகிறேன்.

இது வாஸ்தவத்தில் ஞான ரஹஸ்யத்திற்கு முன்னதாக வரவேண்டியதொன்று. ஆயினும் கால தாமதமாகவேணும் கிட்டிய "மந்திர சக்தி" என்ற இப்பொக்கிஷம் அக்ஷரங்களின் சக்தி, வீர்யம், ஜப முறைமை, பலன், சித்தி போன்றவைகளைப் பற்றி தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. நமது குறிக்கோளாகிய ஞான ரஹஸ்யத்தினை முதற்கண் ஒரு பார்வையாக கண்ணுற வைத்து பின் நம்மைதயாரப்படுத்தும் நோக்கில் மந்திர ஜெபத்தின் வகைகள், முறைகள் முதலியவற்றை ஆழமாக நம் மனதில் பதிய வைக்க எண்ணியே இந்த ஏற்பாடோ என்று எணணத் தோன்றுகிறது.

ஆரம்ப கால பிரசாரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் மந்திரங்களின் முக்கியத்துவத்தை பிரதானமாகக் கொண்டு ஜனங்களை ஈர்த்தார். இதனால் பெறக் கூடிய இகலோகத்தின் பலன்களையும் அதனை ஓர் ஏணியாக வைத்து பரலோகத்திற்கு முன்னேறும் வழியையும் எடுத்துக் காட்டியுள்ளார். திரு ப்ரஹ்மானந்த அவதூதர் வரைந்திருக்கும் முகவுரை இதன் சிறப்பை நன்கு விளக்குவதாகும்.

அதனைத் தொடர்ந்து வெவ்வேறு சமயங்களில் ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ அருளிய உபதேச உரைகளைக் காணலாம். மேலும், கால விரயமின்றி விலக்ஷண மந்திரானுபவத் தில் நீந்தித் திளைக்க உங்களை அழைக்கின்றேன்.

நிறைவாக, என் அருமை மகள் இந்திரா பாலாஜியின் பேருதவியுடன் இந்தத் திருப்பணி அமைந்ததென்று எப்போதும் போல் கூறி நிறைவு செய்கிறேன்.

– டாக்டர் **அனந்தகிருஷ்ணா**

தத்

ஓம் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர்

## திருவாய் மலர்ந்தருளிய

# ம ந் தி ர ச க் தி

ஓம் தத் ஸத்

## விலக்ஷணானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

# மந்திர சக்தி

### முகவுரை

ஹே, சநாதன தர்ம ஆஸ்திக வைதீக சிகாமணிகளே, பாரத நாட்டு எதார்த்த ஆத்ம சகோதரர்களே, அந்தரங்க பகிரங்க ஆசார சீலர்களே, தீவிர முமுக்ஷுக்களே,

ஆதியில் சிருஷ்டி ஆரம்பிப்பதற்கு முன் பரம காருண்ய பரராகியும் சர்வஜீவ தயாபரக் கடவுளாகியும் சர்வ நியந்தாவாகியும் சர்வ கூடமாகியும் இருக்கப்பட்ட சர்வேஸ்வரரானவர் சகல ஜீவ கோடிகளின் மாயாரகித அகண்டானந்த பிரஹ்மஞான நிவிர்த்தி மார்க்க பரமமோக்ஷ நன்மையை உத்தேசித்துப் பிரபஞ்சத்தையும் அதனுள்ளடங்கிய சூக்ஷும ஸ்தூல பஞ்ச பூத பஞ்சீகரண பகிர்முக சரீரங்களையும் அதன் சாதன வர்க்கங்களையும் வருணாஸ்ரம தர்மங்களையும் வேதங்களையும் அதை வகிக்கச் சக்தியுள்ள ரிஷிகளையும் தமது சத்திய சங்கல்பத்தினால் சிருஷ்டி செய்தனர். அவ்வாறே, சுத்த சத்துவ ஞானானுஷ்டான முறையாய் விளங்கக் கூடிய மஹான்களும் பக்தர்களும் யோகிகளும் பண்டிதர்களும் ஞானிகளும் ரிஷிகளும் சித்தர்களும் ஆசாரியர்களுமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது, இடை யிடையே ரஜோகுண தமோ குணக் கலப்புகளும் நாஸ்திகர்களும் துஷ்டர்களும் அதிகரித்த காலத்தில் ஸர்வலோக சரண்யராகிய பகவான் மஹாத்மாக்களாகிய தேவர்களின் பிரார்த்தனைக்கிணங்கிக் காலம் தேசம் நடை பலம் ஆசாரம் தைரியம் முறை ஞான பக்குவம் தந்திரம் எதார்த்தம் இவைகளுக்கேற்றவாறு ஓர் தெய்வீக மஹா புருஷராய்ப் தோன்றி ஞானம் தருமம் பக்தி அனுஷ்டானம் இவைகளை அசையாதவாறு ஸ்தாபித்துவிட்டு மறைந்துவிடுவது நமது புண்ணிய பூமியாகிய பாரத கண்டத்தில் இதுவரை வழக்கமாக இருந்து வருகிறது.

சுமார் ஐயாயிர வருஷங்களுக்கு முன் குருக்ஷேத்திர புண்ணிய பூமியில் எழுபத்திரண்டு லக்ஷம் சதுரங்க சைன்யங்களின் மத்தியில் நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய ரதத்தின் மீது ஒரு கையில் குதிரையின் லகான் சவுக்கு இவைகளும், மற்றொரு கையில் உபதேச அடையாளமாகிய ஞான முத்திரையும் மற்றிரண்டு கைகளில் சுதர்ஸனம், பாஞ்ச சன்யமுங் கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா காண்டீபனுக்கு உபதேசிக்குங் காலத்தில் ஹே, அர்ஜுனா, எந்தக் காலத்தில் எனது ஆதி சிருஷ்டியின் அபிப்பிராயத்திற்கு விரோதமான துஷ்டர்கள் அதிகமாகிறார்களோ, எந்தத் தருணத்தில் அந்தர்முக நிவிர்த்தி மார்க்கமான ஞான மோக்ஷ தருமங்களுக்குப் பிரபலமான தடைகள் ஏற்படுகிறதோ, எந்தச் சமயத்தில் வேதங்களுக்கும் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மஹான்களுக்கும் அவமதிப்பு நேரிடுகிறதோ, எப்போது தர்மமும் தர்மிஷ்டர்களும் குறைந்து அதர்மமும் அதர்மிஷ்டர்களும் அதிகமாகிறார்களோ, எந்தக் காலத்தில் பிரஹ்மத்தை அறிவதற்கு ஏதுவாகச் செய்யப்பட்ட வருணாஸ்ரம தர்மங்களும் பாரமார்த்தீக சநாதன மார்க்கங்களும் குறைவுபடுகிறதோ, எந்தக் காலத்தில் சர்வேஸ்வரனது சிருஷ்டியின் ரகஸ்யத்திற்கு விரோதம் நடைபெறுகிறதோ, அந்தக் காலத்தில் யாதொரு தடையுமின்றிச் சத்தியமாய் அவதரிக்கிறேன் என்று உறுதி கூறியிருக்கிறார். இவ்வாறு நமது ஆதிகால முதல் இதுவரை தவறாது நடந்து வந்திருக்கிறது.

இப்பொழுது நமது பாரத கண்டமும் அதன் சகலவித க்ஷேமங்களும் சநாதன தர்ம வைதீக ஹிந்துமதமும் அதன் அந்தரங்க பகிரங்க தத்துவங்களும் வேதாகம புராண இதிகாச ஸ்மிருதிகளும் மதாசாரியர்களும் அரசர்களும் நிலை குலைந்து சீர்கெட்டுத் தடுமாறிப் போயிருப்பதால் ஆதிகால தேவர்கள் ரிஷிகள் இவர்களின் சம்பிரதாயத்தை அனுசரித்து தேச மத ஞான மோக்ஷ உத்தாரணமான வீர்ய முறையில் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமீஜீ அவர்கள் சில காலங்களாக சேஷாத்திரி பர்வதமாகிய திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வர பகவானது ஆக்ஞையைப் பெற்றுக் கொண்டு அடியிற் கண்டபடி பிரசாரம் ஆரம்பித்திருக்கிறார்கள்.



ஸ்வாமீஜீ அவர்களும் இதுவரை முற்கூறிய சம்பந்தமாகத் திருவேங்கடம் ஸ்ரீசைலம் பொதிகாசலம் ருஷ்யமூகம் முதலிய பருவதங்களுக்குத் தபசின் நிமித்தமாய்ச் சென்று திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். தான் மாத்திரம் தேச மத ஞான மோக்ஷ நன்மையின் பொருட்டுத் தபசுக்குச் செல்வதோடுகூட மற்றும் பல ஆயிரக்கணக்கானவர்களைத் தபசின் நிமித்தம் அனுப்புவதாக உத்தேசித்து இதுவரை சிற்சிலரையும் அனுப்பியிருக்கின்றனர்.

## தபசுக்குச் செல்லக் கூடியவர்களுக்கு ஏற்பட்ட விதிகள்

பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களும் நாற்பது வயதிற் குட்பட்டவர்களும், விவாகமாகாதவர்களும் ஹிந்து மதஸ்தர்களாயுமிருக்கப்பட்ட பிராம்மணர்கள் முதல் தீண்டாதவர்கள் வரை யாராயிருந்தாலும் இதில் சேரலாம். அப்படிச் சேர்ந்து தபசுக்கு வரக்கூடியவர்கள் சொல்பமான ஒருவேளை ஆகாரமோ காய் கனி கிழங்கு முதலியவைகளைப் புசித்தோ, மூலிகை சருகு ஜலம் இவைகளைப் பக்ஷணம் செய்வதோ, காற்றைச் சாப்பிட்டோ அவரவர்களுக்கு ஏதேது முடியுமோ அதற்குச் சம்மதித்துத் தபசுக்கு வரக்கூடியவர்களை ஒன்பது பேர்களடங்கிய ஞானதபோ சங்கத்தார்கள் பரீக்ஷை செய்து தபசுக்கு அதிகாரிகளென்று நிச்சயித்தபிறகு அவர்களுக்குத் தபஸ் செய்ய வேண்டிய முறைகளைக் காண்பித்து வனம், வனாந்தரம், மலை, குகை, தனிப்பட்ட தேவாலயம் முதலிய ஏகாந்த ஸ்தானங்களுக்கு அனுப்புவார்கள்.

இவ்வாறு தபோ காரியத்திற்குச் செல்லப்பட்டவர்கள் பிரபஞ்சம் முழுவதையும் சிறு துறும்பாக மதிக்கக் கூடியவர்களாயும், ஒன்றையும் இச்சிக்காதவர்களாயும், பகிரங்கத்தில் ஒருவரையும் லக்ஷியம் செய்யாதவர்களாயும், சாந்த சுபாவமுள்ளவர்களாயும், தேச நன்மை, மத க்ஷேமம், தனது ஞானவிருத்தி இவற்றை உத்தேசித்தவர்களாயும், வார்த்தையில் விருப்பமில்லாதவர்களாயும் அறுசுவை உணவாதிகளில் ஆசையற்றவர்களாயும், மீறி ஓடுகின்ற இந்திரியங்களை மடக்கி அடக்கக்கூடியவர்களாயும், உயிரை ஒரு பொருட்டாக நினையாதவர்களாயும், இருத்தல் வேண்டும்.

இந்த தெய்வீகமான தபோ காரியத்திற்கு வரக்கூடிய எண்ணமுடையவர்கள் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிஜி அவர்

களின் அந்தரங்க காரியதரிசி தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப் பள்ளி என்ற விலாஸத்திற்கு எழுதிக் கொள்ள வேண்டும்.

இது தவிர, நமது பாரத நாட்டிலுள்ள ஹிந்துமதஸ்தர்களில் நூறு லக்ஷம் பேர்கள் பிராமணர்கள் முதல் ஸ்திரீகள் பாலர்கள் உள்பட தீண்டத்தகாதவர்கள் வரை எல்லோரும் ஜாதிமத பேத மின்றிப் பிரணவம், தாரகப் பிரஹ்மம், சாக்ஷாத்கார மஹா வாக்கியம், திரீயாக்ஷரம், சிவபஞ்சாக்ஷரம், சக்தி பஞ்சாக்ஷரம், விஷ்ணு பஞ்சாக்ஷரம், சுப்ரமண்ய சடாக்ஷரம், தேவி சடாக்ஷரம், சப்தாக்ஷரம், கணேச அஷ்டாக்ஷரம், நாராயண அஷ்டாக்ஷரம், சதாசிவ நவாக்ஷரம், ஸ்ரீ ராதாகிருஷ்ண நவாக்ஷரீ, ஞானதசாக்ஷரம், வாசுதேவ துவாதசாக்ஷரம், மஹாதேவ துவாதசாக்ஷரம், ஸ்ரீராம திரயோத சாக்ஷரீ, பாலசாரதா, ஸ்ரீ வேங்கடேஸ்வர மூலமந்திரம், அகஸ்திய சோடசாக்ஷரீ, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மந்திரம், ஹிரண்ய கர்ப்ப மூல மந்திரம், மஹாலக்ஷ்மீ மூல மந்திரம் ஹயக்ரீவ மூல மந்திரம், கலி சந்தாரணம், சோடசாக்ஷரீ, நவ நவத்ரீயாக்ஷரீ முதலிய மஹாமந்திரங்களை நாள்தோறும் தவறாமல் ஆயிரத் தெட்டுக்கு குறையாமல் யாராருக்கு எந்தெந்த மஹா மந்திரங்களில் நம்பிக்கையும் விஸ்வாஸமுமிருக்கிறதோ, அந்தந்த மந்திரங்களை ஏகாக்கிரமாக ஜெபம் செய்து இரவு ஆகாரம் சாப்பிடுவதற்குமுன் இரண்டு கைகளின் நிறைய சுத்தமான ஜலம் எடுத்துஉத்தரமுகமாய் நின்று கொண்டு அர்ப்பணத்திற்காக ஸ்வாமீஜீ அவர்களால் கொடுக்கக் கூடிய அர்ப்பண வாக்கியங்களை மனதினால் சாந்தமாக நினைத்து வாக்கால் மெதுவாகவுச் சரித்து இரண்டு கைகளிலு முள்ள தீர்த்தத்தைச் சாவதானமாகப் பூமியில் விட்டுவிட வேண்டும். இம்மாதிரியாக மூன்று முறை அர்ப்பணம் செய்தால் மிகவும் நல்லது. மஹா மந்திர ஜெபங்கள் ஆயிரத்தியெட்டுக்கு அதிகமாக எவ்வளவு வேண்டுமானாலும் செய்யலாம். ஆயிரத்தி யெட்டுக்கு மாத்திரம் குறையக் கூடாது. இந்த மந்திர ஜெபங்கள் அறுபது நாழிகைக்குள் எப்போது சாவகாசம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் ஜெபிக்கலாம். மெதுவாக நடந்து கொண்டும் ஜெபம் செய்யலாம். எப்படி ஜெபஞ் செய்தாலும் மனது மாத்திரம் ஏகாக்கிரமாக இருக்க வேண்டும். ஸ்நானம் செய்து விட்டுத்தான் ஜெபிக்க வேண்டுமென்ற நியமமில்லை. பல் துலக்கிவிட்டு



அவரவர்கள் ஜெபித்து வரக்கூடிய மஹா மந்திரங்களை மெதுவாக உச்சரித்துத் தீர்த்தத்தைச் சிரசில் புரோக்ஷித்துக் கொள்வது மந்திர ஸ்நானமாகையால் அப்படிச் செய்து கொண்டு ஜெபம் செய்யலாம். புருஷர்கள் ஸ்திரீகள் யாராவது தாயாதிகள் சுற்றத்தார்கள் மரண மான தீட்டுக் காலங்களிலும், புத்திரோத்ஸவ முதலிய தீட்டுக் காலங்களிலும், ஸ்திரீகள் வீட்டு விலக்குக் காலங்களிலும், ஜெப மணியைக் கையில் தொடாமல் வலது கை விரல்களிலுள்ள இருபது வரைகளைக் கொண்டோ, சோழீ, புளியம்வித்து, சிறுகற்கள், இவை களைக் கொண்டோ, தீட்டுத் தீருகிறவரை ஜெபித்து மொத்தமாகக் கணக்குச் சேர்த்து மந்திரங்களின் கணக்குக் குறிக்கப்படுகிற நோட்டு புஸ்தகங்களில் முன்கூறிய தினங்களின் கணக்குப்படி மந்திரங்களின் எண்ணிக்கைகளைப் பிரித்துக் குறித்துவிட்டு மொத்தமாக அர்ப்பணம் செய்து விடவேண்டும்.

வேகமான குதிரையை ஓடாமல் நிறுத்த வேண்டுமானால் ஓர் முளை அடித்து அதில் குதிரையைக் கட்டி விட்டால் முளையைச் சுற்றிச் சுற்றி வந்து முளையைப் பறித்துக் கொண்டு குதிரை ஓடிவிட நேரும். ஆனால், நான்கு மூலையில் நான்கு முளை அடித்து நான்கு கெட்டியான கயிற்றால் கட்டிக் குதிரையை நடுமத்தியில் நிறுத்தி விட்டால், அந்தக் குதிரையை அங்குமிங்கும் அசைய முடியாததுபோல, மனமென்கிற வேகமான குதிரையை ஜெபமணியால் ஜெபிப்பது ஓர் முளை. உடனுடனே ஜெபக் கணக்கு வைத்துக் கொள்வது மற்றோர் முளை. அர்ப்பணம் செய்வது மூன்றாவது முளை. நோட்டுப் புஸ்தகங்களில் கணக்குக் குறிப்பது கடைசி முளை. இந்த நான்கு முளைகளிலும் பிரயத்தனம் என்கிற கயிற்றால் மனக்குதிரையை இறுக்கிக் கட்டிவிட்டால் மனம் எங்கும் அசைய முடியாது. தனி ஜெபம் மட்டும் இருந்தால் மனம் வசப்பட வழியில்லை. மனத்தின் ஸ்திரத்துவத்தை உண்டாக்கு வதனாலேயே மந்திரம் என்ற பெயர் ஆதியிலேயே அமைந்திருக் கிறது.

தெய்வப் பிரதிநிதிகளான ஜீவாத்மாக்களால் செய்யப்படுகிற மஹா மந்திர ஜெப சக்தியின் பலத்தினாலும் ஆயிரக்கணக்கான வர்கள் செய்கிற தபோ மஹிமையின் வீர்யத்தினாலும் அகண்டாகார தேஜோமய தெய்வீக சக்தியானது ஓர் திவ்ய தேவவடிவ

உத்க்ருஷ்ட மஹா புருஷராய்த் தோன்றிப் பாரத கண்டத்தின் சம்பூர்ண க்ஷேமம், ஹிந்து மதமென்கிற ஸநாதன தர்ம வைதீகஸ்தாபனம், ஜீவாத்மாக்களின் பிரஹ்ம ஞானவிருத்தி, இவைகளை ஸ்தாபித்துவிடுவதில் யாதொரு சந்தேகமுமில்லை. நிச்சயமாய் சத்தியமாய் எதார்த்தமாய் இந்த தெய்வீக காரியம் முடியு மென்பது உறுதி. முன் காலங்களில் மஹாத்மாக்களான மஹரிஷி களாலும் தேவ ரிஷிகளாலும் இந்த மாதிரி பிரசாரங்கள் அடிக்கடி செய்யப்பட்டு வந்ததால் நாம் வைதீகம் லௌகீகம் அந்தர்முகம் பகிர்முகம் இவ்விரண்டிலும் யாதொரு குறைவுமின்றி க்ஷேமமாக வாழ்ந்து வந்தோம் ஆதலால், பூர்வீக கால முறைப்படி இந்தப் பிரசாரம் ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மஹா மந்திரங்களின் தத்துவங்களைப் பாகம் பாகமாகப் பிரித்து இந்த நூலில் எல்லா விஷயங்களும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவஸ்யமான பல மஹா மந்திரங்களும் அதன் தத்துவங்களும் அந்தந்த மந்திரங்களின் சக்தியும் அதை அனுஷ்டித்துப் பிரயோஜனத்தை அடைந்தவர்களின் பெயரும், ஒவ்வொரு மஹா மந்திரங்கள் சித்தியாகிற காலக் கணக்கும், ஜெப சித்தியின் முடிவும் மந்திர சித்தியானதற்குள்ள அடையாளங்களும் ஒவ்வொரு மந்திரங்களின் அதிதேவதை அபிமான தேவதை உபாஸனா தேவதை அதிஷ்டான தேவதை இந்த நான்கின் விபரங் களையும் விரிவாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

முன் கூறிய மஹா மந்திரங்கள் ஸ்வாமீஜீ அவர்களிடம் நேரில் பெற்றுக் கொள்ளும்போது மந்திர ஜெப அனுஷ்டான முறைகள். அதன் விதிகள் அர்ப்பணக் கிரமம், மந்திரக் கணக்கு வைத்துக் கொள்ளும் விவரங்கள் இவற்றை நேரில் தெரிந்து கொள்ளலாம்.

நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களும் தபசுக்கு வர எண்ண மிருந்தால் அவர்களையும் ஞான தபோ சங்கத்தார்கள் சேர்த்துக் கொள்வார்கள். மஹா மந்திர ஜெபங்கள் பிரவாகம்போல் போகும் போது ஹிருதயத்திலுள்ள அழுக்கையும் சலனத்தையும் போக்கி விட்டு அப்பால் ஞானோதயத்திற்கும் ஏதுவாக்கிவிடும்.



அஞ்ஞான பாசங்களையும், நாஸ்திகக் கூட்டங்களையும், பல ஜென்மாந்தர வாசனைகளையும், பாபகர்மங்களையும், துஷ்டர்களின் கூட்டுறவுகளையும், பஞ்சமஹா பாதகங்களையும், ஸநாதன தர்ம விரோதமான அநாகரீங்களையும், இந்த நூலின் அந்தரங்க சக்தி துளைத்து ஊடுருவிச் செல்லும் வீர்யம் வாய்ந்திருப்பதால் இந்த சாஸ்திரத்திற்கு மந்திர சக்தி என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இப்படிக்கு

எ.எ.ங.ஙயி. **ஸ்ரீ பிரஹ்மானந்த அவதூதர்**

ஓம் தத் ஸத்

# ஸ்ரீ மஹா மந்திரங்களின் அனுஷ்டான அனுபவ முறைகள்

1. சர்வ வியாபகராயும் சர்வலோக சரண்யராயும் சர்வ நியந்தாவாயும் சர்வேஸ்வரனாயும் சர்வாந்தர்யாமியாயும் சர்வ கூடமாயும் சர்வ சாக்ஷி சொரூபமாயும் அமைந்திருக்கப்பட்ட யாதொரு பரவஸ்துவுண்டோ அந்தவஸ்து சிருஷ்டி ஆரம்பிப்ப தற்குமுன் சகல ஜீவர்களின் உஜ்ஜீவனார்த்தமாக இச்சா சக்தியை முன்னிட்டு ஞான சக்தி ரூபமாய் ஓம் என்ற நாதமாய் ஸ்புரித்தது.

2. மந்திர காண்டம் (அதாவது) உபாஸனா காண்டம் இது வேதத்தின் மூன்று பாகத்தின் நடுப்பாகம்.

3. கட்டுக்கடங்காத மனத்தை ஓர் கட்டுக்குள் அடக்கி விடுவதாலும் மனோவிருத்தியை அதிலேயே ஸ்திரப்படுத்தி விடுவதாலும் மந்திரம் என்ற பெயர் வாய்ந்திருக்கிறது.

4. கற்பனாதீத வஸ்துவின் காருண்யம் ததும்பி ஆதியில் நாத ரூபமாய் வெளிவந்தபோது அதுவே மந்திர ரூபமாகிக் கிரியா ரூபமாய் வரும்போது ஞான சாதன மாகிய கரும யோகமாயிற்று.

5. மந்திர ஸ்வரூபி சர்வேஸ்வரனாகையால் மந்திர ஜெபம் அதிகரித்துப் பாபம் குறைந்து மனம் தெளிவடையும் போது ஜோதி ஸ்வரூபம் புலப்படுகிறது.

6. ஆதி காலத்தில் முதல் முதலில் மந்திர ரகஸ்யத்தை மஹரிஷிகள் மூலமாய் உலகத்திற்கு வெளியிட்டவர் பரவாசுதேவர் மஹாதேவர்.

7. சீக்கிரம் ஜென்மம் ஒழிய வேண்டிய பக்குவமுடையவர் களுக்கே மந்திரத்தின் அருமையான மகிமை புலப்படும்.

8. யாரார் ஏதேது கூறினாலும் நமது ஹிருதயத்தில் தாக்காது போகுமானால் அப்போதுதான் மந்திர சக்தி ஹிருதயத்தில் புகுந்திருக்கின்றதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.



9. ஒவ்வொரு மஹா மந்திரங்களுக்கும் அதிதேவதை அபிமான தேவதை உபாஸனா தேவதை அதிஷ்டான தேவதை இந்த நான்கு தேவதைகளுமிருக்கின்றன.

10. மந்திரங்களெல்லாம் சகுணத்தைப் பற்றி அப்பால் நிர்க்குணத்தில் வியாபிக்கின்றன.

11. மந்திர சித்தி பெற்ற மஹாத்மாக்களிடம் மந்திரோபதேசம் பெற்றாலன்றி மந்திரம் பலிதமாகிறதில்லை.

12. காமத்தை ஜெயிக்க வேண்டியவர்கள் மந்திர ஜெபத்தை அதிகப்படுத்திக் கொண்டே போக வேண்டும்.

13. மந்திர ஜெபத்திற்கும் அதனதன் தேவதைகளுக்கும் அனுஷ்டான பரர்களுக்கும் நெருங்கிய சம்மந்தமுண்டு.

14. மந்திர ஜெபத்தின் பூர்ணப் பிரவாகமாரம்பிக்கும்போது மனதும் பிராணனும் இந்திரிய சக்திகளும் பரமாத்மாவை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கின்றன.

15. அப்பிராகிருத வைகுண்டத்திலும் உத்தர கைலாஸத்திலும் முறையே பரவாசுதேவரும் மஹாதேவரும் மஹாலக்ஷ்மிக்கும் உமாதேவிக்கும் அஷ்டாக்ஷர பஞ்சாக்ஷர மஹா மந்திரங்களை உபதேசம் செய்திருக்கிறார்கள்.

16. யாராவது சொல்லக் கேட்டோ, சாஸ்திரங்களில் பார்த்தோ சிரத்தையில்லாமலோ மந்திர ஜெபம் ஆரம்பிக்கக் கூடாது.

17. விளையாட்டுத்தனத்தினாலோ, டம்ப குணத்தினாலோ, ஆரம்பிக்கப்பட்ட மஹா மந்திர ஜெபங்களும் காலாந்தரத்தில் எதார்த்தத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகின்றன.

18. நமது மனத்திலுள்ள அகங்காரத்தையும் ஆசை முதலான துற்குணங்களையும் நாம் விடவும் வைத்துக் கொள்ளவும் யோசிக்க வேண்டாம். மந்திர ஜெபம் அதிகரிக்க அதிகரிக்க அவைகளெல்லாம் தானே ஒழிய ஆரம்பிக்கின்றன.

19. வீட்டைச் சிறிதாகக் கட்டி வாழ்வைப் பெரிதாக்குவதுதான் உண்மையான தனவந்தர்களின் அனுஷ்டிப்புப் போல,

சாஸ்திரங்களைச் சுருக்கி அப்பியாஸம் அனுஷ்டானம் இவைகளை அதிகப்படுத்திக் கொண்டு போவதுதான் மந்திர ரிஷிகள் கருத்து.

20. உலகவுத்தாரண ஜீவகாருண்ய சொரூபிகளான மஹத்துக்களிடம் மந்திரோபதேசம் பெற்றுக் கொள்ளாமல் திரவ்யாபேக்ஷைக்காகவும் ஜீவனத்திற்காகவும் உபதேசிக்கிறவர்களிடம் கேட்டுக் கொண்ட மந்திரங்கள் பயன்பட மாட்டாது.

21. வியாதிகள் வருவது, சத்துருக்கள் விருத்தியாவது, தரித்திர தசை உண்டாவது, பலர் நிந்திப்பது இவைகள் ஞான விருத்திக்குச் சாதனமாகிய மஹா மந்திர ஜெபப் பிரயோக வர்த்தகர்களுக்குச் சீக்கிரம் மந்திர சித்தியை உண்டாக்கி விடுகிறது.

22. பிறருக்குத் தீங்கு விளைவிக்க வேண்டிய எண்ணத்துடன் ஏவல் பில்லி சூனியம் ராஜ வஸ்யம், ஸ்திரீ வஸ்யம் இவைகளுக்காக ஜெபிப்பது தமோ குண மந்திரங்கள்.

உலகத்தார் தன்னைக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணத்தோடு சிறுசிறு தேவதைகள் பூதம் பிரம்ம ராக்ஷஸ பைசாசம் இவைகளை வேலை வாங்குதல், சிங்கம் முதலிய சகல மிருகங்களையும் அடக்கி விடுதல், பிறர் ஹிருதயத்தை அறிந்து கொள்ளுதல், சர்ப்பம் முதலிய விஷ ஜெந்துக்களை வரவழைத்தல், பல ஆயிர மைல்களிலுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல் இவைகளுக்காக ஜெபிப்பது ரஜோ குண மந்திரங்கள்.

பரமாத்மாவை அறிய வேண்டுமென்ற எண்ணத்துடன் சரீர சுத்தி பிராண சுத்தி நாடி சுத்தி ஹிருதய சுத்தி பாபக் கூட்டங்கள் நசித்தல் ஞான சித்தி மோக்ஷ மார்க்கம் இவைகளுக்காக ஜெபிப்பது சத்துவ குண மந்திரங்கள்.

23. ஒவ்வொருவரும் அவரவர்கள் ஜெபித்து வரக் கூடிய மஹா மந்திரங்களைத் தானாகவோ யாராவது கேட்டோ பகிரங்கமாக



வெளியிட்டுவிடும் பக்ஷத்தில் மந்திரங்கள் பலிதமாக மாட்டாதென்று மந்திர சாஸ்திரம் கூறுகிறது.

24. மஹா மந்திரங்களை ஜெபிக்கப்பட்டவர்களது இரத்த சக்தியை மந்திர ஜெப விருத்தியின் சக்தியானது இழுத்து விடுகிறபடியால், ஜெபப் பிரவர்த்தகர்கள் சத்துவ குணமானதும் சத்துள்ளதும் ஆரோக்கியம் பலம் இவைகளைத் தருவதுமாகிய ஆகாரத்தை அதிகப்படுத்திச் சரீர பலம் இரத்தவிருத்தி மூளையின் சுறுசுறுப்பு இவற்றை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இரத்தத்தின் மதம் குறையும் பொருட்டு விரதாதிகளை அனுஷ்டிக்கும்படி சாஸ்திரங்கள் சொல்லுகிறபடியால் மஹாமந்திர ஜெப விருத்திப் பிரவர்த்தகர்கள் யாதொரு விரதாதிகளும் அனுஷ்டிக்க வேண்டியதில்லை.

25. ஆதியில் கருட பகவான் அஷ்டாக்ஷர மந்திரத்தை முறையோடு பத்துக் கோடி ஜெபம் செய்து எப்போதும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியினிடத்திலேயே வாசம் செய்யும்படியான பாக்கியத்தை அடைந்தார்.

26. நந்திகேஸ்வரர் பஞ்சாக்ஷர மந்திரத்தைப் பதினேழு கோடி ஜெபம் செய்து மஹா கைலாஸ பருவதத்தில் திருநேத்திரதாரியாகிய எம்பெருமானிடத்திலேயே வாசம் செய்யும்படியான நிலைமையை அடைந்திருக்கிறார்.

27. ஆஞ்சநேயர் தாரகப் பிரஹ்ம மந்திரத்தின் இருபது கோடி ஜெபத்தின் பூர்த்தியில் ஸ்ரீராமச்சந்திர பகவானைத் தரிசிக்குந் தன்மையை அடைந்தார்.

28. வான்மீக மகரிஷி ஒன்பது வருஷத்தில் ஏகாக்கிர புத்தியுடன் மூன்றரைக் கோடி தாரகப் பிரஹ்ம ஜெபஞ் செய்ததால் பிரஹ்ம தரிசனமாகிய நிருவிகல்ப சமாதியும் சர்வக்ஞ மஹரிஷித் தன்மையும் யடைந்தன.

29. பிரஹலாதன் தனது மாதாவின் ஒன்பது மாத கெர்ப்ப காலத்திலிருந்து ஐந்து வயதுவரை ஆறுகோடி அஷ்டாக்ஷர மந்திர ஜெபம் செய்து வந்ததால் தனது அரண் சூழ்ந்த

மாளிகையிலேயே ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தெரிசிக்கும் விசேஷத்தை அடைந்தான்.

30. துருவன் என்ற ஐந்து வயது சிறு பாலகன் துவாதசாக்ஷர மந்திரத்தை ஒரு வருஷ காலத்திற்குள் ஒரு கோடி ஜெபம் செய்ததால் பரந்தாமனது பரிபூரண சொரூபத்தைத் தரிசித்தார்.

31. பாஞ்சால தேசத்திலுள்ள துளசிதாஸ் என்பவர் ஸ்ரீராம தாரகப் பிரஹ்ம மஹாமந்திரத்தின் இருபது கோடி ஜெப பூர்த்தியினால் மனத்திலுள்ள பேதபாவனைகள் நீங்கப் பெற்று ஸ்ரீராகவரை அவரது பரிவாரங்களோடு தரிசனம் செய்தார்.

32. மஹாராஷ்டிர தேச பக்த சிகாமணியாகிய சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் திரயோதசாக்ஷரீ மஹாமந்திரத்தின் பதின் மூன்றரைக் கோடி ஜெபத்தின் முடிவில் சக்கிரவர்த்தித் திருக்குமாரரை அடிக்கடி தெரிசனம் செய்யும் பெரும் பாக்கியத்தை அடைந்தார்.

33. க்ஷத்திரபந்து என்ற வித்தையில்லாத ஒருவன் மூன்று வருஷ காலத்தில் திரீயாக்ஷர மஹா மந்திரத்தைப் பதினோரு கோடி ஜெபம் செய்து ஜனன மரணமற்ற அப்ராகிருத வைகுண்டத்தை அடைந்தார்.

34. திருப்பாணாழ்வார் திருவரங்கம் பெரிய கோவில் என்ற மந்திரத்தின் ஒன்பதுகோடி ஜெப முடிவில் ஸ்ரீ ரெங்கநாதப் பெருமானது சகுணசாயுஜ்யப் பதவியை அடைந்தார்.

35. கொங்கணர் என்பவர் வேட ஜாதியில் பிறந்தும் அகஸ்திய முனிவரால் சுப்ரமண்ய சடாக்ஷர மந்திரம் உபதேசிக்கப் பெற்றுப் பதினெட்டுக் கோடி ஜெப முடிவில் நித்திய சித்தரானார்.

36. பிந்துசேகரன் என்னும் ஓர் அரசகுமாரன் கலியுக ஆரம்பத்தில் ஸ்ரீ ராதாகிருஷ்ண நவாக்ஷரீ மஹா மந்திரத்தின் பதினாறு கோடி ஜெப முடிவில் பராசக்தியாகிய ஸ்ரீ ராதாதேவியையும் பரமாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானையும் ஞானதிருஷ்டியால் தெரிசனம் செய்தான்.



37. ருத்ரபசுபதிநாயனார் காரண பஞ்சாக்ஷரத்தின் ஏழு கோடி ஜெப முடிவில் மஹா கைலாசத்தை அடைந்தார்.

38. வல்லபாசாரி என்ற ஓர் வைஷ்ணவ மாதாசாரியார் நவநவ திரீயாக்ஷரீ என்ற மஹா மந்திரத்தைப் பதினைந்து கோடி ஜெபம் செய்து அதன் முடிவில் சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமந் நாராயணனைத் தெரிசனம் செய்தார்.

39. மந்திர ஜெபமும் அதன் பாவனையும் மனமும் அழிந்து ஒன்றுபட்ட காலத்தில் மந்திர மூர்த்தி பிரசன்னமாகிறது.

40. மந்திரத்தின் பாவனை (காண்பான்) மந்திரத்தின் காக்ஷி (மனம்) மந்திரத்தின் செய்கை (காணப்படும் பொருள்) இம்மூன்றும் அழிவு பெற்ற காலத்தில் பிரஹ்ம தரிசனம் உண்டாகிறது.

41. ஸ்தூலம் சூக்ஷமம் காரணம் என்ற இந்த மூன்று சரீரங்களுக்குள்ளிருக்கிற முப்பத்திரெண்டு ஸ்தானங்களும் அதிகரித்த மந்திர ஜெபப் பிரவாகத்தினால் பரிசுத்தமாகும் போது மஹரிஷிகள் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள்.

42. அவ்வப்போது ஜெப சக்தியை அர்ப்பணம் செய்துவிடுவதால் அளவற்ற பிரயோஜனங்கள் உண்டாகின்றன.

43. ஒரே மந்திரம் எல்லா மந்திரங்களின் சக்தியையும் பெற்றுக் கொள்ளும்படி செய்வது அவரவர்களுடைய ஞானத்தைப் பொறுத்திருக்கிறது.

44. பிரயோஜனத்தை விரும்பாமல் மந்திர ஜெபம் செய்வதால் பிறவாத மோக்ஷத்தையும் பிரயோஜனத்தை விரும்பிச் செய்வதால் பிறக்கிற பந்தத்தையும் அடையலாம்.

45. ஒவ்வொரு மஹா மந்திரங்களுக்கும் இத்தனை கோடி ஜெபம் முடிவு பெற்றால் மந்திரம் பூரண சித்தியானதென்று நியதி ஏற்பட்டிருக்கிறது.

46. நமது மனத்திலுள்ள மலம் விக்ஷேபம் ஆவரணம் (அதாவது) அழுக்கு சஞ்சலம் இருட்டு இம்மூன்றில் அழுக்கையும்

சஞ்சலத்தையும் முதலில் போக்கிக் கடைசியில் இருட்டையும் மந்திர சக்தி போக்கி விடுகிறது.

47. வேதாந்தம் யோகம் சாங்கியம் இவைகளால் அடையப்படுகிற பிரயோஜனங்கள் இந்த மஹா மந்திர ஜெப பூர்த்தியினால் அடைந்து விடலாம்.

48. மந்திர ஜெப மத்ய காலங்களில் நித்தியா நித்திய வஸ்து விவேகம் இகபரபோகவிராகம் சமாதிஷட்சம்பத்தி முமூக்ஷுத்துவம் என்ற நான்கு ஞான சாதனங்களும் முறையே தொடர ஆரம்பிக்கின்றன.

49. எந்த மந்திரங்களுக்கும் அந்தந்த மந்திரங்களின் பூரண சித்திக் கணக்குகளை நான்கு பாகப்படுத்தி முதலில் அதிதேவதையும் இரண்டாவது பாகத்தில் அபிமான தேவதையும் மூன்றாவது பாகத்தில் உபாஸனா தேவதையும் நான்காவது பாகத்தில் அதிஷ்டான தேவதையும் பிரசன்னமாகிறது.

50. இந்த நான்கு தேவதாரூபிகளும் பயங்கரக் காக்ஷிகளாலோ, பயத்தின் விசேஷத்தாலோ, பரீக்ஷா காரணத்தினாலோ, பக்குவக் குறைவாலோ, ஏமாற்ற முயற்சிக்கலாம் அதி ஜாக்கிரதையுடனிருந்து கொள்ள வேண்டும்.

51. மத்ய தேவதைகள் மனதை மயக்கி அனித்திய போகபதவிகளைக் காட்டி ஜெபவிருத்தியைத் தடுத்து விடவும் கூடும்.

52. உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் செய்துவிடக் கூடிய மஹாமாயையை மந்திர ஜெபத்தின் பூரண சக்தி தடுத்து விடும்.

53. நின்று கொண்டும் நடந்து கொண்டும் சாய்ந்து கொண்டும் சயனித்துக் கொண்டும் உட்கார்ந்துக் கொண்டும் மந்திர ஜெபம் செய்யலாம். ஆனால், மனது மாத்திரம் நின்று கொண்டு, நடந்து கொண்டு, சாய்ந்து கொண்டு, சயனித்துக் கொண்டு, உட்கார்ந்து கொண்டு இருத்தல் கூடாது. ஜெபத்திலும் ஜெப விருத்தியிலும் ஜெபக் கணக்கிலும் ஜெப



தேவதையிலும் மனோவிருத்தி சென்று கொண்டிருக்க வேண்டும்.

54. சுகம் துக்கம் லாபம் நஷ்டம் ராகம் துவேஷம் நன்மை தீமை சீதம் உஷ்ணம் மனசு அமனஸ் இரவு பகல் போக்கு வரவு புண்ணியம் பாவம் இவைகளில்லாத இடத்திற்கு வியாபிப்பதே மந்திர நாத மஹரிஷிகளின் அபிப்பிராயம்.

55. மனோ குணங்களைத் தாண்டிச் செல்வது வேதாந்த முறை, அடக்கிச் செல்வது மந்திர முறை.

56. எந்த மந்திர தேவதைகளையும் மற்ற யாரையும் சூர்யன் முதலான தேவர்களையும் சிஷ்யர்கள் தங்கள் ஆசாரியர்களையும் ஸ்திரீகள் தங்கள் மணவாளர்களையும் பிரஹ்ம சொரூபமாகப் பாவித்து அனுஷ்டித்து வந்தால் பிரஹ்ம ஞானாப்பியாசிகள் அடையக் கூடிய உத்தம பிரயோஜனத்தைப் பரம்பரையாக அடைந்துவிடலாம்.

57. ஸ்திரீகள் நான்காம் வருணத்தவர்கள் தீண்டத் தகாதவர்கள் இவர்கள் வேதம் படிக்கக் கூடாதென்ற சட்டம் நமது நாட்டிலிருப்பது கொண்டு பகவானாகிய ஸ்ரீ வியாஸர் அபார கருணையுடன் முன்கூறிய மூன்றினத்தவர்களின் உஜ்ஜீவனத்தை முன்னிட்டுப் புராணங்களையும் இதிகாச ரத்தினமாயும் ஐந்தாம் வேதமாயுள்ள ஸ்ரீ மகாபாரதத்தையும் திருவாய் மலர்ந்தருளினார்.

58. அப்படி முற்கூறிய மூன்றினத்தவர்களுக்காகப் புராணங்களையும் ஸ்ரீ மஹா பாரதத்தையும் ஸ்ரீ வியாஸ மஹரிஷியால் ஏற்படுத்தியது வாஸ்தவமானால் அதிலடங்கியுள்ள மஹா மந்திரங்களையும் அம்மூன்றினத்தவர்களும் உச்சரிக்கலாம்; அனுஷ்டிக்கலாம் என்றேற்படுகிறது.

59. புராண இதிகாசங்களிலுள்ள அஷ்டாக்ஷரம் பஞ்சாக்ஷரம் துவாசாக்ஷரம் பிரணவம் திரீயாக்ஷரம் நவநவ திரீயாக்ஷரீ சக்திபஞ்சாக்ஷரீ சடாக்ஷரம் சாக்ஷாத்கார மஹா வாக்கியம் நவாக்ஷரம் சோடசாக்ஷரீ கலிசந்தாரணம் முதலிய மஹா மந்திரங்களையும் ஸ்திரீகள் நான்காம் வருணத்தவர்

றும், இரண்டுவித மார்க்கங்களிருக்கின்றன. அதில் ஒன்றையும் சிந்தியாமல் ஜெபிப்பது தனது ஞான மோக்ஷ நன்மையின் பொருட்டு மட்டுமாகையால், இப்போது பிரபஞ்சமிருக்கிற நிலைமையை உத்தேசித்துப் பாரத கண்டத்தின் சம்பூரண க்ஷேமம் வேத சம்மதமானதும் ஈஸ்வரனது அங்கீகாரம் பெற்றதுமான சநாதன தர்ம வைதீக மதத்தின் அபிவிருத்தி, பாரதர்களின் தபோ சித்தி, நமது ஞான மோக்ஷ பூர்த்தி இவைகளுக்காக ஜெபம் செய்து அர்ப்பணம் செய்து வரவேண்டும்.

73. உலகத்தில் ஒருவனை ஒருவன் ஸ்தோதிரம் செய்தால் சந்தோஷமும் நிந்தித்தால் கோபமும் உண்டாவதற்குக் காரணம் அந்தந்த அக்ஷரங்களிலுள்ள சக்திதான் அதுபோல், பகவானது நமோச்சாரணமான ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் ஒவ்வோர் சக்தி அமைந்திருக்கிறது.

74. தினந்தோறும் மந்திர ஜெபம் ஆரம்பிக்கின்ற காலத்தில் அவரவர்கள் ஜெபித்து வருகிற மஹா மந்திரத்தின் அதி தேவதை, அபிமான தேவதை, உபாஸனா தேவதை, அதிஷ்டான தேவதை இந்த நான்கு தேவதாரூபங்களையும் மனதில் தியானித்துச் சீக்கிரம் மந்திர சித்தியாக வேண்டுமென்று பிரார்த்தித்து வரவேண்டும். அப்படி நான்கு தேவதா ரூபங்களையும் ஆரம்பத்தில் தியானித்துக் கொண்டு மந்திர ஜெபம் ஆரம்பித்தால் இடைக்காலங்களில் ஜெபத்தின் பரிபூரண சித்திக்கு இடையூறுகள் வராதபடி அந்தந்த தேவதைகள் பாதுகாத்துக் கொள்ள ஏதுவாகும்.

75. மஹா மந்திரங்களை உச்சரிக்கும்போது அதன் சப்தம் அவரவர்களுடைய ஸ்தூல சரீரத்தினுடைய எல்லையை விட்டு வெளியில் போகாதவாறு ஜெபிப்பதால் சீக்கிரம் வீர்யமான பலிதத்தைக் கொடுக்கிறது.

76. ஜெயமானாலும் அபஜெயமானாலும் மந்திர ஜெபங்களை விடாமுயற்சியுடன் செய்து வருவதால் மத்ய தேவதை ஆச்சரியமடைந்து சீக்கிரம் நம்மைப் பரிசுத்தப்படுத்தும் சங்கல்பத்தைக் கைக்கொள்கிறது.



77. மனதையும் இந்திரியங்களையும் சிதறவிடாது நிறுத்திக் கொண்டு ஜெபிக்கும் மந்திர சக்தியானது பதினாயிரம் மடங்கு வீர்யமுடையது.

78. ஒருகோடி ஜெபமாகிறவரை இரு கண்களையும் திறந்து கொண்டு ஜெபம் செய்ய வேண்டும். ஒரு கோடிக்கும் மேல் மூன்று கோடி வரை மூடிக் கொண்டு ஜெபஞ் செய்ய வேண்டும். அப்பால் இரு கண்களையும் மூடிக் கொண்டி ருந்தாலும் திறந்து கொண்டிருந்தாலும் குற்றமில்லை.

79. ஐம்பது லக்ஷம் ஜெபத்திற்கு மேலும் நூற்றைம்பது லக்ஷத் திற்குக் கீழும் சூக்ஷும சரீரத்தடை உடல் தடை இவை களும், நூற்றைம்பது லக்ஷத்திற்கு மேலும் இருநூற்றைம்பது லக்ஷத்திற்குக் கீழும் உலகத் தடை அதிகார தேவர்களின் தடைகள் இவைகளும், இருநூற்றைம்பது லக்ஷத்திற்கு மேலும் நானூறு லக்ஷத்திற்கு கீழும் அஞ்ஞானத் தடை அவாந்தரப் பிரதிபந்தமும் நானூறு லக்ஷத்திற்கு மேல் அறுநூறு லக்ஷம்வரை பரீக்ஷைத் தடையும் பயங்கரமான பரிசுத்த தேவர்களின் தடைகளும் ஏற்படுமாகையால் ஈஸ்வர பலம் ஆசார்ய பலம் மனோ பலம் இவைகளை இப்போதே தயார் செய்து கொள்ள வேண்டும்.

80. இந்த மஹா மந்திரங்களின் தவறாத ஏகாக்கிர ஜெபத்தின் பிரவாகமானது முதல் முதலில் மனம் வாக்கு சரீரம் இவைகளிலுள்ள முன் ஜென்மாந்திர பாப கர்மங்களைப் போக்கி அப்பால் இந்த ஜென்ம ஆகாமிய சஞ்சிதங்களை அழித்துச் சகல இந்திரியம் பிராணன் மனது இவைகளைப் பரிசுத்தப்படுத்தி யோக ஞான மார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்து பிரஹ்ம சொரூபத்தில் இரண்டறக் கலந்துவிடச் செய்வது.

81. ஞானாப்பியாஸமானது கர்மயோகம் பக்தியோகம் இராஜ யோகம் இம்மூன்றும் முடிந்த பரிபக்குவமுடையவர்களுக் கும், கடைசி ஜென்மமுடையவர்களுக்கும் கிடைக்கக் கூடியது. யோகாப்பியாஸமோ, ஆகார இச்சை சகல இந்திரிய ஆசை உலக மயக்கம் ஏஷணாத்திரயங்களின் பந்தம்

இவைகளை விட்டவர்களுக்கே பலிதமாகக் கூடியது. இந்த மஹா மந்திர ஜெபங்களுக்கோ மனைவி மக்களோடிருக்க லாம். அறுசுவை ஆகாராதிகளை சாப்பிடலாம். வியாபாரம் விவசாயம் செய்யலாம். உத்தியோகம் பார்க்கலாம். சகல ஆசைகளையும் வெறுத்து ஓட்டம் பிடிக்க வேண்டிய அவஸ்யமில்லை. எந்த வருணங்களிலும் ஆஸ்ரமங்களிலும் இருக்கலாம். கடின மானதும் கட்டுப்பாடுள்ளதுமான ஆசாரங்கள் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. ஆனால், இந்த மஹா மந்திர ஜெப சித்தியினால் கிடைக்கக் கூடிய பிரயோஜனமோ, ஞானம் யோகம் இவைகளின் பூர்த்தியால் கிடைக்கக் கூடிய பிரயோஜனத்தை ஒத்திருக்கிறது.

82. தசேந்திரியங்களின் வீர்யமான எழுச்சி அடங்குகிறவரை ஸ்தூலக் கண்களைத் திறந்து கொண்டு ஜெபிப்பது கூடாது.

83. பலனை விரும்பி ஜெபம் செய்வது முழங்காலில் ஜலம் வார்ப்பதை ஒக்கும். விரும்பாது செய்வது சிரசில் தீர்த்தத்தை வார்ப்பதை நிகர்க்கும்.

84. ஒரே திரவ்யம் கெட்டது நல்லது என்ற இரண்டு காரியங் களுக்கும் சாதனமாவது போலவும், ஒரே சங்கீதம் லௌகீக மான நாடகம் முதலியவைகளுக்கும் சர்வேஸ்வரனை நினைத்து உருகிப் பாடுவதற்கும், ஒரே வித்தை வாய் கூசாமல் மனிதர்களான பிரபுக்களையும் அரசர்களையும் திரவ்யத்திற்காகப் பாடவும் ஞான மோக்ஷ மார்க்கத்தில் பிரவிருத்திக்கவும் ஏதுவாவதுபோலவும், இந்த மஹா மந்திர சக்தியும் அனித்தியமான சித்தி மார்க்கங்களிலும் இந்திராதி போகங்களிலும் நித்தியமான முக்தி மார்க்கத்திலும் இனிப் பிறவாத தன்மையிலும் செல்ல ஏதுவாகிறது.

85. மஹா மந்திர ஜெபம் சீக்கிரம் பூர்த்தியாக வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் ஆகாரமின்றிப் பரதவிக்கிற எந்த ஜாதி ஏழைகளானாலும் ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும் பசு பக்ஷி எறும்பு செடி கொடி மரம் முதலியவைகளுக்கும் அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு போஜனமளித்து வரவேண்டும்.



86. பிரஹ்ம வித்துக்களான பிராம்மணர்கள் அகப்படுவது அவரவர்கள் பாக்கியத்தைப் பொறுத்திருக்கிறபடியால் அப்படிப்பட்ட மஹாத்மாக்களுக்கு ஒரு வேளை போஜன மளித்தால் பிரபஞ்சத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஏக காலத்தில் அன்னமிட்ட புண்ணியமும் கிடைத்து அதனால் சீக்கிரம் மந்திர சித்தியும் ஆகிறது.

87. ஜீவ வதை செய்யாமலும் மாம்ஸாகாரம் புசியாமலும் இருக்கப் பட்டவர்களால் ஜெபிக்கப்படுகிற மந்திரங்கள் சீக்கிரம் பலனடைவதுடன் மந்திர தேவதைகள் மகிழ்ச்சியும் தாராள சிந்தையுங்கொண்டு பிரசன்னமாகிறது.

88. பொறுப்பற்ற மந்திரங்களை ஜெபித்துவருவதால் புண்ணியம் மட்டும் கிடைக்கிறது. பொறுப்புள்ள மந்திரங்களை ஜெபித்து வருவதால் புண்ணியப் பிரவாகமும் மந்திர அதிஷ்டான தேவதையும் பிரசன்னமாகிறது.

89. எந்த மந்திரமாயிருந்தாலும் வேதததின் நடுப்பாகமாகிய மந்திர காண்டத்தில் ஒப்புக் கொண்டதாயிருக்க வேண்டும்.

90. அவரவர்கள் முன் ஜென்மாந்தர பாப புண்ணியங்களுக்குத் தக்கவாறு மஹா மந்திரங்கள் சிறிது காலத்திலும் அதிக காலத்திலும் சித்தியாகிறது.

91. ஓஜஸ் என்னும் பிரம்மரந்திர சக்திக்கு அடிப்படையானதும், ஞான சாதனமானதும், சரீர தத்துவங்களெல்லாவற்றிலும் பிரகாசமுடையதும், ஞான சக்தி யோக சக்தி தபோ சக்தி இவைகளை விருத்தி பண்ணுவதும் பிந்து சுக்கிலம் ரேதஸ் என்ற பெயர்களோடு கூடியதும் சத்துவ சொரூபமானதுமாகிய வீர்ய சக்தியைத் தம்மால் கூடியவரை பகிர்முகப்படுத்தாத வர்களுக்கு மஹா மந்திரங்கள் அதிசீக்கிரம் பலிதமாகிறது.

92. மந்திரம் தனியாகவும் நாம் வேறாகவும் நமது மனம் அப்புறமாகவுமிருந்தால் மந்திரம் பலிதமாகிறதில்லை. மஹா மந்திரங்களை மனதுடன் சேர்த்து இவ்விரண்டையும் ஆத்மாவுடன் ஒன்றுபடுத்தி ஜெபிப்பதால் மனோ சக்தி தெய்வ சக்தி இவ்விரண்டும் பிரசன்னமாகும்.

93. மஹா மந்திரங்களின் ஜெபப் பிரவாக சக்தியினால் வரக் கூடிய பிராரத்த கருமங்கள் குறைவுபடுவதும், மஹா ரோகங்கள் விலகி விடுவதும், துஷ்ட தேவதைகளின் உபாதி ஒழிவதும், மற்றும் சகலபாபங்களும் நசித்துப் போவதும், அவரவர்கள் மனோ எண்ணங்கள் பூர்த்தியாவதும், இனிப் பிறவாதிருத்தல் என்கிற ஆச்சரியத்தன்மையை அடைவதும் கிடைக்கப்படுகின்றன.

94. வரக்கூடிய பிராரத்துவ கருமங்களை மஹா மந்திர ஜெபதாரணையால் தடுத்து நின்றவர்களில் மார்க்கண்டர் ஸ்ரீவத்ஸர் கௌண்டுண்யர் நிகுளாசுவன் நிமார்க்கஜன் பிரஹ்லாதன் திருநாவுக்கரசர் என்பவர்கள் பிரசித்த மானவர்கள்.

95. ஒரு தேவதை ஒருவரத்தைக் கொடுப்பது நாம் வாங்குவது என்பது ஒன்றிருக்குமானால் அந்த வரம் அழிவது என்பது ஒன்றிருக்குமதலால், கொடுப்பது வாங்குவது அழிவது என்ற இம்மூன்றின் சங்கல்பமின்றிய மஹா மந்திர ஜெபமே நித்திய மோக்ஷ சாம்ப்ராஜ்யத்தை அனுபவ சித்தியாக்கக் கூடியது.

96. தீவிரமாகவும் பிரவாகமாகவும் நிபந்தனைக்குட்பட்டும் மந்திரஜெபம் செய்து வந்தால் மனோ சங்கல்பம் ஒய்வு பெற்று மந்திர அதிஷ்டான தேவதையின் உருவம் பிரசன்ன மாகி அப்பால் அதுவுமறைந்து திருபுடிரகித நிருவிகல்ப ஸமாதி ஸ்திதி சித்திக்கிறது.

97. புத்திரர்கள் மாதா பிதாக்களுக்கும் ஸ்திரீகள் மணவாளனுக் கும் அடங்கியிருந்து மந்திர ஜெபம் யோக ஞானாப்பியாசம் இவைகளை அப்பியாசிக்க வேதம் இடம் கொடுக்கிறது.

98. ஸ்திரிகள் அவரவர்களது ஸ்தூல சரீர நாயகர்களது ஆக்ஞைப்படி நடப்பதாலும், அவர்கள் மனம் போல நடந்து வருவதாலும், சித்த சுத்தி உண்டாகிறது. ஆதலால், ஸ்திரீகள் அவரவர்கள் நாயகர்களது உத்தரவு பெற்றுக் கொண்டு மஹா மந்திர ஜெபம் யோகாப்பியாஸம் ஞானாப் பியாஸம் முதலியவைகளை அனுஷ்டிக்கச் சாஸ்திரங்களும் இடங்கொடுத்திருக்கிறது. ரிஷிகளும் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள்.



99. சூடாலை லீலை கற்கடி சுசீலா மைத்ரேயீ அனுசூயா நாரீமணீ காரைக்காலம்மையார் ஆண்டாள் முதலிய மஹாத்மாக்களான நமது பாரத நாட்டு ஸ்திரீகளும் சித்த சுத்திக்கேதுவான சரீர தர்மத்துட னிருந்து கொண்டு சாஸ்திர ஆராய்ச்சி மஹா மந்திர ஜெபம் யோகப் பழக்கம் ஞானாப் பியாசம் இவைகளை அனுஷ்டித்து வந்ததாகவும் தெரிகிறது.

100. 1. ரக்தபீஜரோகஸ்தானம் 2. தசேந்திரிய மயக்க ஸ்தானம் 3. போக இச்சை ஸ்தானம் 4. உலக நிந்தை ஸ்தானம் 5. தேவ பய ஸ்தானம் 6. மரண அச்ச ஸ்தானம் 7. பாப புண்ணியச் சேர்க்கை ஸ்தானம் 8. அனித்யலாப ஸ்தானம் 9.வித்தியா ஸ்தானம் 10. ஜென்ம ஞாபக ஸ்தானம் 11. கனவின்பீஜ ஸ்தானம் 12. அவித்தியாதந்திர ஸ்தானம் 13. பிராண நிலை ஸ்தானம் 14. மனோவியாதி ஸ்தானம் 15. சஞ்சாரகதி ஸ்தானம் 16. அடங்காதவிருத்தி ஸ்தானம் 17. புத்திநடுக்க ஸ்தானம் 18. ஆதிவியாதி ஸ்தானம் 19. குண்டலிமாய ஸ்தானம் 20. அகங்கார தனுசு ஸ்தானம் 21. தமோகுண ஸ்தானம் 22. ரஜோகுண ஸ்தானம் 23. அபரசத்துவகுண ஸ்தானம் 24. மும்மலப்பிரிவின் ஸ்தானம் 25. ஆகாமிய சஞ்சித பிரார்த்த ஸ்தானம் 26.அபமிருத்யு ஸ்தானம் 27. அவாந்தர ஸ்தானம் 28. விகல்ப ஸ்தானம் 29. திருமூர்த்தி ஸ்தானம் 30. திருபுடி ஸ்தானம் 31. சாந்த ஸ்தானம் 32. ஞான ஸ்தானம் இந்த முப்பத்திரெண்டு ஸ்தானங்களும் பரிசுத்தமாய் விட்டால் மந்திர ஜெபம் சித்தியானதென்று தெரிந்து கொள்ள வேண்டும். மந்திர ஜெபம் பூரண சித்தியானால்தான் இந்த முப்பத்திரெண்டு ஸ்தானங்களும் பரிசுத்தமாகும்.

101. எந்தெந்த மஹா மந்திரங்களை யாரார் ஜெபித்து வருகிறார்களோ அவரவர்கள் அந்தந்த மந்திரங்களின்

அதிஷ்டான தேவதையின் உருவப் படமொன்றை எதிரில் வைத்துக் கொண்டு ஜெபித்தால் மிகவும் உத்தமம்.

102. ஜெபப் பிரவாகம் போய்க்கொண்டிருக்கும்போது அவரவர்கள் அனுபவத்திலேயே திடீர் திடீரென்று பலபல மாறுதல்களும் அற்புத விஷயங்களும் பிரத்தியக்ஷத்தில் தோற்றப்படும். இதை அவரவர்களே கண்டு கொள்ள வேண்டியது.

103. வாக்கினால் உச்சரிக்கப்படுகிற மந்திர ஜெபமானது சில காலங்களில் சாந்தவுச்சாரண ஜெபமாக மாறி அதன்பின் ஸ்மரண ஜெபமாக உதயமாகி அதற்குப்பின் தியான ஜெபமாக ஸ்புரித்து அதனப்பால் சம்ப்ரக்ஞாத ஜெபமாகிக் கடைசியில் அஸம்ப்ரக்ஞாத சமாதியில் கொண்டு போய் விட்டு விடுகிறது. இதுதான் வான்மீக மஹரிஷியின் அனுபவம். இந்த அனுபவமே பதஞ்சலி முதலிய யோகி களும், கபிலர் முதலிய சாங்கியர்களும், வியாஸர் முதலிய வேதாந்திகளும், நாரதர் முதலிய பக்தர்களும், ஜனகராஜா முதலிய கர்மயோகி களும், ஜைமினி முதலிய கர்மகர்த்தாக் களும், ஜனகாதி நான்கு மஹரிஷிகளும் அகஸ்தியர் முதலிய சித்தர்களும், சுகர் வாமதேவர் முதலிய பிரஹ்ம ரிஷிகளும் அடைந்திருக் கிறார்கள்.

104. உலக வெறுப்பும் பிரஹ்ம ஞான இச்சையுமில்லாமல் மந்திர ஜெபம் ஆரம்பிப்பவர்கள் காமிய எண்ணங்களிலும் பிரயோஜனமற்ற தோற்றங்களிலும் போலிப் பிரகாசங்களிலும் மனோ கற்பனையாலுண்டாகிற ஜோதி ஸ்வரூபத்திலும் மயங்குவார்கள்.

105. அத்வைத அனுபவம் விசிஷ்டாத்வைத ஆனந்தம் துவைத சாக்ஷாத்காரம் இவைகளை அடைய ஆசைப்படுபவர்களும் வேறுவேறு சம்பிரதாயமாகவும் முறையாகவும் மஹா மந்திரங் களை ஜெபம் செய்து வரலாம்.

106. ஐந்து வருஷ முதல் நாற்பது வருஷத்திற்குட்பட்ட வயதுடைய சரீரத்தைச் சொந்தமாகவுடையவர்களுக்கே, யோகாப்பியாஸ பூர்த்தி ஞான சித்தி மந்திர ஜெப முடிவு



இவைகள் சீக்கிரம் உச்ச ஸ்தானத்தை யடையுமென்று சகல சாஸ்திரங்களும் கூறுகின்றன. அதன் கர்த்தாக்களும் கூறுகிறார்கள். ஆதலால், பால யவ்வனப் பருவமுடைய வர்களே அதிகமாக இந்த மந்திர ஜெபப் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும்.

107. நாம் ஜெபித்து வருகிற மந்திரத்தின் சக்தியனைத்தும் தன்னைத்தான் அனுபவத்திலறிதல் என்கிற அந்தர்முக பிரஹ்ம ஞான சித்திக்காகச் செய்யப்பட வேண்டுமே யொழிய சில காலங்களில் மாறிவிடக் கூடிய பகிர்முக அனித்திய போக பதவிகளுக்காக ஜெபிக்கக் கூடாது.

108. நிஷ்காமிய சாதனமாயிருந்தால் காமியத்தையும் நித்தியற் கேதுவாயிருந்தால் அனித்தியத்தையும் சத்தியத்திற்குச் சாதனமாயிருந்தால் அசத்தியத்தையும் மோக்ஷத்திற்கு கேதுவாயிருந்தால் பந்தத்தையும் நிராசைக்கு ஏதுவாயிருந் தால் ஆசையையும் நன்மைக்கு ஏதுவாயிருந்தால் தீமையையும் பரத்திற்குச் சாதனமாயிருந்தால் அபரத்தையும் மஹா மந்திர ஜப அனுஷ்டானப் பிரவர்த்தகர்கள் விசாரணை செய்து ஆரம்பிக்கலாம்.

109. தனி வாக்கு மாத்திரத்தினால் எத்தனையோ வேதாந்தம் பேசுபவர்களையும் பக்திப் பிரசங்கம் செய்பவர்களையும் கர்மானுஷ்டானத்தைக் குறித்துக் கண்டிப்பாய்ப் பேசுபவர் களையும் நாம் நேரே பார்த்திருக்கிறோம். மனம் வாக்கு சரீரம் என்ற மூன்று கரணங்களும் தசேந்திரியங்களும் அடங்காத வியாவகாரிக தசையிலேயே அத்வைதம் துவைதம் விசிஷ்டாத்வைதம் என்று வாயால் பரத்வ நிச்சயஞ் செய்து பலமாகத் தர்க்கித்து அளவு கடந்து வாயால் பேசி மதாசாரியர் களாக இருப்பவர்களையும் பார்க்கிறோம். இவை அனைத்தும் போலி என்று நாம் வாய் கூசாமல் சொல்வோம். அதிக மழையைக் கண்ட தவளை கத்துவதும் மனுஷர்களைக் கண்ட கொசு கூப்பிடுவதும் இதற்குச் சமானமாகிறது. எது எப்படியிருந்தாலும் நாம் சத்திய வஸ்துவை அனுபவத்தில் மந்திர சித்தியின் மூலமாகவோ, யோகாப்பியாஸ மார்க்க

மாகவோ, பக்தியின் வழியாகவோ ஞானாப்பியாஸ மார்க்கத்தினாலோ, செல்ல முயற்சிக்க வேண்டும்.

110. உலகம் சதா மாறிக் கொண்டேயிருக்கிறது, பிரஜைகள் கண்ணுக்கெதிரே மண்ணாய்ப் போகின்றதைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். துர்நாற்றமும் துக்கமும் நிறைந்திருக்கப்பட்ட சரீரத்தை நாமென்றெண்ணியிருக்கிறோம். அதுவோ, நம்மைக் கேட்காமல் போய்விடப் போகிறது. இந்த சரீரமிருக்கும்போதே சத்திய வஸ்துவைப் பிரத்தியக்ஷ அனுபவத்திலறிய ஆசை கொண்டு மஹா மந்திரங்களை ஏகாக்கிர புத்தியோடு ஜெபித்து சர்வேஸ்வர ஜகதீஸ்வர எம்பெருமானுக்கு அர்ப்பணம் செய்து வரவேண்டும்.

111. பிரபஞ்ச ஜனங்கள் நம்மை நல்லவன் புண்ணியவான் மேதாவி மஹான் என்று கூறினால், இந்த நான்கு பக்குவங்களும் நமக்கு வந்துவிடப் போவதில்லை. கெட்டவன் பாபி மூடன் அஞ்ஞானி என்று சொன்னால், இந்தநான்கும் நமக்கு வந்துவிடப் போவதில்லை. ஆதலால், உலக ஜனங்களையும் அவர்களது வார்த்தைகளையும் சிறு துரும்புக்கும் தாழ்வாக மதித்து ஸ்துதி நிந்தை இவ்விரண்டிலும் சமத்துவ புத்தியோடு மஹாமந்திர ஜெபானுஷ்டான சகுண நிர்க்குண ஊர்த்வ கதியின் நிதித்தியாஸன மார்க்கத்தில் அதி துரிதமாகச் செல்ல வேண்டும்.

112. ஹ்ருதயம் தெளிவல்லாதிருப்பது ஓர் பெரிய மஹா ரோக மென்று சித்தர்களும் ஆயுர்வேத ஸ்தாபகர்களுமாகிய தன்வந்திரி அகஸ்தியர் முதலியவர்கள் கூறியிருக்கிறபடியால் மஹா மந்திர ஜெபப் பிரவிருத்தியில் ஈடுபட்டவர்கள் மனதை எப்போதும் ஸ்படிகம் போன்று தெளிவாகவே வைத்துக் கொள்ள வேண்டும்.

113. பிறர் அறியாதபடி மஹா மந்திரங்களை அந்தரங்கமாக ஜெபித்து வருவதால் சீக்கிரம் மந்திர சித்தியாகிறது.

114. மஹா மந்திரங்களைக் கோடிக்கணக்காக ஜெபித்து வரும் போது மந்த புத்தியுடையவர்களும் சூக்ஷும புத்தியுடைய வராகிறார்கள்.



115. மஹா மந்திரங்களை ஏகாக்கிர புத்தியுடன் முறைப்படி ஜெபித்து வரும்போது,

ஒருகோடி ஜெபமானவுடன் ஸ்தூல சரீரத்தில் குடி கொண்டிருக்கும் வியாதிகள் நாசமடைகின்றன. வீண் கற்பனை எண்ணங்கள் குறைகிறது. நல்ல கனவுகள் காணப்படுகின்றன. மனது சத்துவக் குண விருத்தியில் பிரவேசிக்கிறது.

இரண்டு கோடி யானவுடன் மனோ சஞ்சலத்திற்கேதுவான பல சங்கடங்கள் தீருகின்றன. விரோதிகளெல்லாம் தானே சிநேகிக்க வருவார்கள்.

மூன்று கோடி யானவுடன் அதிதேவதை பிரசன்னமாகிறது. குடும்பத்தில் கடன் முதலியவைகளிருந்தால் நிவிர்த்தியாய் விடுகிறது. தன்னால் முடியாதுபோன காரியங்களெல்லாம் தானே முடிகிறது.

நான்கு கோடி முடிவில் உலக துக்கங்கள் மனதில் அழுந்தித் தாக்குவதில்லை. முன்னேற்பட்டிருக்கிற பல கஷ்டங்களும் போகிறது. புத்திரனில்லாதவர்களுக்குப் புத்திரனுண்டாகிறது. விரோதமான புத்திரன் சிநேகிக்க வருவான். புத்திரன் புத்தி தீக்ஷண்யமடைந்து நல்ல பலனை அடைவான்.

ஐந்து கோடி ஜெப முடிவில் நாலாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன்பது வியாதிகளின் வித்துக்கள் (அதாவது) பீஜங்கள் மூலத்தோடு நாசமடைகிறது. பகிர்முகச் சத்துருக்களும் அந்தர்முக காமக்குரோத விரோதிகளும் நாசமடைகிறார்கள்.

ஆறு கோடியின் முடிவில் அபிமான தேவதை பிரசன்னமாகிறது. மனைவி பிரதிகூலமாயிருந்தால் அனுகூலப்படுகிறாள். புருஷன் பிரதிகூலமாயிருந்தால் அனுகூலப்படுகிறான். உலக அனித்திய சுகங்களில் இச்சையற்ற மனது உண்டாகிறது.

ஏழு கோடியானவுடன் சஞ்சிதத்தால் வரக்கூடிய அபமிருத்யு தோஷமும், தேவ பயமும் விலகி விடுகிறது. மனோ குண

ஆனந்தமும் உதாசீன குணமும் உண்டாகிறது. பல ஜென்மாந்தர பாப கர்மங்கள் முழுமையும் மிச்சமின்றி ஒழிந்து விடுகிறது. மஹான்கள் வலுவில் தேடி வருவார்கள். வரப்போகிற காரியங்கள் தோன்றுகின்றன.

எட்டுக்கோடி ஜெப பூர்த்தி பெற்றபின் உபாஸனா தேவதை பிரசன்னமாகிறது. ஸ்திரீகள் செல்வம் வீடு நிலம் இவைகள் வலுவில் வருகிறது. சற்குரு தரிசனமும் அதனால் சகுண எம்பெருமானது பிரத்யக்ஷமும் கிடைக்கிறது.

ஒன்பதுகோடி யானவுடன் ரஜோ குண தமோ குண விருத்திகள் பூரணமாக ஓய்வு படுகின்றன. சுத்த சத்துவ விருத்தியே பிரதிபலிக்கின்றது. அதிஷ்டான தேவதை பிரசன்ன மாகிறது.

பத்துக்கோடி ஜெபமானவுடன் தான் உத்தேசித்திருந்த சகல காரியங்களும் பூர்த்தியாகின்றன. பூர்ண ஞானோதயம் உண்டாகிறது.

116. பிரஹ்ம ஞான மடையாமலும் சுவானுபவ மில்லாமலும் மனதிற்கு உபசாந்தி வராமலும் மனிதன் பூமியில் உயிர் வாழ்வதற்கு யாதொரு நியாயமுமில்லை யென்று வேதத்தின் மந்திர காண்டம் கூறுகிற படியால் ஒவ்வொரு மனிதனும் முன் கூறியவைகள் சித்திக்கும் பொருட்டு நிஷ்காம புத்தியுடன் மஹா மந்திர ஜெபம் செய்து ஜகத் காரண வஸ்துவிற்கு அர்ப்பணம் செய்து வரவேண்டும்.

-: ஓம் தத் ஸத் :-

**விலக்ஷணானந்தர்**

ஓம் தத் ஸத்

# மந்திர மாலிகா

## 1. பிரணவம்

இந்த மஹா மந்திரத்திற்கு ஏகாக்ஷரம், பிரணவம், ஜீவ மந்திரம், ஆதி காரணம் என்ற பெயர்களுண்டு. இது சர்வவியாபி யான பிரஹ்ம சொருபத்தின் ஆதி சங்கல்பம். சிருஷ்டி ஆரம்பிப்ப தற்கு முன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பிரம்ம தேவருக்கு இந்த மந்திரத்தை உபதேசித்து அதன் ரகஸ்ய தத்துவங்களையும் அபூர்வ சக்திகளையும் காண்பிவித்து சதுர்வேதங்களையும் இந்த மஹா மந்திரத்திற்குள்ளேயிருந்து வெளிப்படுத்தி ஐம்பத்தோரு கோடி மஹா மந்திரங்களின் ஜீவ சக்தியை இதில் நிரூபித்துக் காட்டி விளக்கியிருக்கிறார்.

இந்த மந்திரத்தை அப்பியாசித்துப் பிரஹ்ம சொரூபத்தை அடைந்தவர்களில் பிரமதேவர், சுப்ரமண்யர், தத்தாத்ரேயர், தன்வந்திரி, கபிலர், பதஞ்சலி இவர்கள் விசேஷமானவர்கள். இந்த மஹா மந்திரத்திரத்தின் சக்தியும், மஹிமையும் அளவிடற்கரியது. இதற்கு அதிதேவதை தன்வந்திரி, அபிமான தேவதை தத்தாத்திரேயர், உபாஸனா தேவதை சுப்ரமண்யர், அதிஷ்டான தேவதை பரமாத்மா இருபது கோடி ஜெபம் செய்து முடித்தால் இந்த மந்திரம் சித்தியாகிறது.

## 2. தாரகப் பிரஹ்மம்

இந்த மஹா மந்திரம் இரண்டு அக்ஷரங்களோடு கூடியது. பிரணவத்துடன் சேர்த்து ஜெபிக்கும்படி அந்த சாஸ்திரம் சொல்லு கிறது. இந்த மந்திரம் சகல சுருதிகளிலும் இதிகாசங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பது, பிரம்ம தேவரும் சமஸ்த தேவர் களும் சதா உச்சரித்துக் கொண்டிருக்கக் கூடியது. ராமதாரக ரகஸ்யோபநிஷத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சக்கிரவர்த்தித் திருக்குமாரராகிய ஸ்ரீ ராகவா் அவதாரமாவதற்கு முன்னமேயே இந்த மந்திரம் வேதங்களில் அனாதியாகத் தோன்றிக்

கொண்டிருக்கிறது. மஹாத்மாவாகிய வான்மீக மஹரிஷி ஒன்பது வருஷ காலத்திற்குள் இந்த மஹா மந்திரத்தை மூன்றரைக்கோடி ஜெபம் செய்து நிருவிகல்ப ஸமாதி ஸ்திதியையும் சர்வக்ஞ மஹரிஷித் தன்மையையும் அடைந்திருக்கிறார். ஸ்மரித்த மாத்திரத்தில் சகல பாவங்களையும் போக்கிவிடக் கூடியது. மஹா யோகிகள் ஆச்சரியப்படத் தகுந்தது. ஜீவர்களின் ஹிருதயத்தைச் சீக்கிரம் ஆத்ம சொரூபத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பது. சுகப் பிரஹ்மரிஷியின் அவதாரமாகிய கபீர்தாஸ் என்பவர் இந்த மந்திரத்தை இருபது கோடி ஜெபம் செய்து தனது சகல சுதந்தரங் களையும் இந்த மந்திர தேவதையினிடத்தில் அர்ப்பணம் செய்து விட்டு நித்திய சித்தரானார். ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் ஒருநாள் இரவாவது தங்குபவர்களுக்கு ஜெகதீஸ்வரியாகிய விசாலாட்சி அம்மையார் வலது காதைப்பற்றிக் கொள்ள ஸ்ரீவிஸ்வேஸ்வரப் பெருமான் இந்த மந்திரத்தை உபதேசிக்கிறார். இன்னும் இந்த மஹா மந்திரம் பிறவாத முக்தியை அளிக்க வல்லது. சகல சித்திகளையும் கொடுக்கக் கூடியது. திரிமூர்த்தி அம்சத்தோடு கூடியது. இதற்கு அதிதேவதை ஆஞ்சநேயர், அபிமான தேவதை லக்ஷ்ணமர், உபாஸனா தேவதை ஜானகீ, அதிஷ்டான தேவதை ஸ்ரீராகவர் இருபது கோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.

## 3. திரீயாக்ஷரீ

இந்த மந்திரம் மூன்று எழுத்துக்களோடு கூடியது. வேத சாகைகளின் சகல இடங்களிலும் வியாபித்திருப்பது. ரிஷிகளும் சித்தர்களும் அடிக்கடி தொனி செய்து கொண்டிருப்பது. வேத மந்திரங்களுள் விசேஷமானது. க்ஷத்திரபந்து என்ற பரம பக்தன் இந்த மந்திரத்தைப் பதினான்குகோடி ஜெபம் செய்து சர்வலோக சரண்யராகிய ஸ்ரீமந் நாராயணரைத் தரிசித்திருக்கிறான். தொண்டரடிப்பொடியாழ்வார் இதை ஜெபித்தே பகவானது பரம ஏகாந்த பக்திக்கு அதிகாரியானார். இதற்கு அதிதேவதை கருட பகவான், அபிமான தேவதை ஆதிசேஷன், உபாஸனா தேவதை மஹாலக்ஷ்மீ, அதிஷ்டான தேவதை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பதினைந்துகோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.



## 4. சாக்ஷாத்கார மகா வாக்கியம்

இந்த மஹா மந்திரம் பிரஹ்ம சொரூபத்தின் சத்தியம் சாந்தம் சாக்ஷி என்ற மூன்றின் தன்மையை விளக்கிக் காட்டக் கூடிய மூன்று அக்ஷரங்களோடு அமைந்திருப்பது. நான்கு வேத சாகைகளாகிய சர்வ வுபநிஷதங்களிலும் ஆரம்பத்திலும் முடிவிலும் பிரதிபாதித்துக் கொண்டிருக்கக் கூடியது. பரமார்த்த வஸ்துவின் எதார்த்தத்தை அனுபவத்தில் காட்டுந் தன்மை வாய்ந்தது. மனதை ஆத்மாவினிடம் அதிசீக்கிரம் சேர்ப்பிவிக்கக் கூடியது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்குக் குரு க்ஷேத்திர புண்ணிய பூமியில் பதினேழாவது அத்தியாயத்தில் ரகஸ்யமாக உபதேசித்தது. பிரஹ்ம சொரூபத்தின் சத்து, சித்து, ஆனந்தம் இம்மூன்றின் தன்மைகளை விளக்கிக் காட்டுவது. ரிஷிகளும் பரமஹம்ஸ சந்நியாசிகளும் அந்தரங்கமாக வுச்சரித்துக் கொண்டிருக்கக் கூடியது. புண்ணிய சொரூபமான யாக காரியங்களில் ஆரம்பிக்கும் போது முடிவு பெறும்போதும் உச்சாரணஞ் செய்யக் கூடியது. சர்வக்ஞராகிய கௌதமரால் தனது ஏழாவது புத்திரனான சதானந்தர் என்பவருக்கு உபதேசிக்கப்பட்டது. இதற்கு அதிதேவதை பிரஹஸ்பதி, அபிமான தேவதை நாரதர், உபாஸனா தேவதை பிரமமதேவர், அதிஷ்டான தேவதை பிரஹ்மம். பதிமூன்றுகோடி ஜெபமுடிவில் சித்தி பெறக் கூடியது.

## 5. சிவ பஞ்சாக்ஷரம்

இந்த மஹா மந்திரம் ஐந்து அக்ஷரங்களோடு கூடியது. பிரணவத்தைச் சேர்த்து ஆறு எழுத்துக்களுடன் அமைந்திருப்பது. இந்த மந்திரமும், ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷும பஞ்சாக்ஷரம், காரண பஞ்சாக்ஷரம், மஹா காரண பஞ்சாக்ஷரம் ஆதிகாரண பஞ்சாக்ஷரம் என்று ஐந்துவிதங்களிருக்கின்றன. இது வேதங்களி லும், உபநிஷத்துக்களிலும், சிவாகமங்களிலும், புராணங்களிலும், விகசிதமாய்க் கூறப்பட்டிருக்கிறது. அநேக மஹரிஷிகளும் சித்தர் களும் சைவ சமயாசாரியர் நால்வரும் அறுபத்து மூன்று நாயன்மார் களும் முறையோடு ஜெபம் செய்து இனிப்பிறவாத மோக்ஷ லாபத்தை அடைந்திருக்கிறார்கள். மஹா மந்திரங்களுள்

சிரேஷ்டமானது. சோழ தேசத்தில் பிராம்மண வம்ஸத்தில் திருமழப்பாடி என்ற க்ஷேத்திரத்தில் அவதாரம் செய்தருளிய நந்தி என்பவன் இந்தப் பஞ்சாக்ஷர மந்திரத்தின் மகிமைகளைக் கேள்விப்பட்டு ஆசாரியரிடம் முறையே வுபதேஸம் பெற்றுப் பிரவாகரூபமாய் ஜெபம் செய்து முடிவில் மஹா கைலாஸத்தில் பரமசிவனது சாரூப்யப் பதவியை அடைந்ததோடு பதினெட்டுச் சித்தர்களில் ஒருவராகவும் ஆனார். திருநாவுக்கரசு ஸ்வாமிகளை சமணராஜன் சுண்ணாம்புக்காளவாயில் வைத்து நீற்றியபோதும் சரீரத்தில் பாறைக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்தில் போட்டபோதும் இந்தப் பஞ்சாக்ஷர மந்திரத்தின் எதார்த்தமான ஸ்மரணத் தினாலேயே சகலவித கஷ்டங்களினின்றம் நீங்கப் பெற்று சர்வேஸ்வரனது பாதார விந்தத்தை அடைந்தார். இம்மந்திர்ததின் மகிமை இன்னும் அபாரமாகவுள்ளது. இதற்கு அதிதேவதை நந்திகேஸ்வரர், அபிமான தேவதை சுப்ரமண்யர், உபாஸனா தேவதை பருவதராஜகுமாரி, அதிஷ்டான தேவதை பரமசிவன், பதினோரு கோடி ஜெபம் பூர்தியானால் சித்தி பெறக் கூடியது.

## 6. சுப்ரமண்ய சடாக்ஷரம்

இந்த மஹா மந்திரம் பிரணவத்துடன் ஏழு அக்ஷரங்களோடு கூடியது. சில வுபநிஷத்துக்களிலும் புராணங்களிலும் பதினெட்டுச் சித்தர்களது பரிபாஷை சாஸ்திரங்களிலும் பிரசித்தமாகச் சொல்லப் படுகின்றது. அகஸ்தியர் கோரக்கர் கொங்கணர் முதலிய பெரிய சித்தர்கள் இந்த மந்திரத்தை அனுஷ்டித்துப் பூர்ணப் பிரயோஜனத்தை அடைந்திருக்கிறாரக்ள். யோகிகளுக்கும் சித்தர் களுக்கும் வெகு முக்கியமானது. கும்பன் என்னும் அரசனும் அருணகிரிநாதரும் இடைவிடாது இந்த மந்திரத்தை ஸ்மரித்து சித்தி முத்தி முதலிய இரண்டு மார்க்கங்களையும் அடைந் திருக்கிறார்கள். இதற்கு அதிதேவதை தேவேந்திரன் அபிமான தேவதை வீரபாகு தேவர் உபாஸனா தேவதை வல்லீதேவசேனா அதிஷ்டான தேவதை சுப்ரமண்யர். பதின்மூன்று கோடி ஜெப முடிவில் பூர்த்தி பெறக் கூடியது.



## 7. நாராயண அஷ்டாக்ஷரம்

இந்த மஹத்தான மந்திரத்திற்கு நாராயண மஹா வாக்கியம் அஷ்டாக்ஷரம் திருமந்திரம் ஆதிநாராயண மந்திரம் பரத்வமூலம் என்ற பெயர்களுண்டு. இது பிரணவத்தோடு சேர்ந்து எட்டு அக்ஷரங்களோடு கூடியது. வேதங்களிலும் வேத சாகைகளான உபநிஷத்துக்களிலும் புராணங்களிலும் வெகு விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. மஹா நாராயண வுபநிஷத்தில் அதிக விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஆதியில் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி வைகுண்டத்தில் மஹாலக்ஷிமீ கருட பகவான் ஆதிசேஷன் விஷ்வக்ஸேனர் ஜெயவிஜயாள் இவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார். வகுளமாலிகை தொண்டைமான் சக்கிர வர்த்தி என்ற இருவரும் ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமானிடத்தில் இந்த மந்திரத்தை வுபதேஸம் பெற்றுப் பரமப் பிரயோஜனத்தை அடைந்திருக்கிறார்கள்.

நாரத மஹரிஷி ஹிரண்யகசிபுவின் பார்யைக்கு இந்த மகத்தான மந்திரத்தை உபதேசிக்குங் காலத்தில் ஒன்பது மாத கர்ப்பத்தில் வயிற்றுக் குள்ளிருந்தே பிரஹ்லாதன் கேட்டுக் கொண்டான். தூர்வாஸ மஹரிஷியினிடமிருந்து ராஜரிஷியான அம்பரீஷன் இந்த அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்றுக் கொண்டான். ஸ்ரீபாஷ்யகாரர் என்கிற இராமானுஜாசாரியார் தமது ஜன்மஸ்தான மாகிய ஸ்ரீபெரும்புதூரிலிருந்து பாண்டிய நாட்டின் மத்தியிலுள்ள திருக்கோஷ்டியூர் என்ற திவ்யக்ஷேத்திரன்கண் எழுந்தருளியிரா நின்ற மஹாத்மாவாகிய திருக்கோஷ்டியூர் நம்பி என்பவரிடம் பதினெட்டு வருஷங்களில் பதினெட்டு முறை காலால் நடந்து சென்றும் பக்குவமில்லை பக்குவமில்லையென்று திருப்பித் திருப்பி அனுப்பப்பட்டுப் பத்தொன்பதாவது தடவையில் இந்த மஹா மந்திரத்தை ரகஸ்யமாக முறையோடு உபதேசித்து அதன் அந்தரங்க ஞான ரகஸ்ய தத்துவங்களையும் போதித்து இதை எவருக்கும் சொல்வது கூடாது. அப்படி மீறிச் சொல்வாயானால் நீ மீளா நரகத்தை அடைவாய் என்ற ஆசார்யனது சாபரூபமான கட்டளையையும் மீறிப் பெரிய கோபுரத்தின் மீதேறி நின்று ஜாதிமத பேதமில்லா மல் வீரகர்ஜனையோடு உலக ஜனங்களுக்கு

உபதேசித்த மந்திரம். இன்னும் இதன் மஹத்துவம் அபாரமாக வுள்ளது. இதற்கு அதிதேவதை கருடபகவான் அபிமான தேவதை ஆதிசேஷன் உபாஸனா தேவதை மஹாலக்ஷ்மீ அதிஷ்டான தேவதை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி எட்டுக் கோடி ஜெப அந்தத்தில் சித்திப் பெறக் கூடியது.

## 8. ஸ்ரீ கணேச அஷ்டாக்ஷரம்

இந்த ரகஸ்ய மந்திரம் ஏகாக்ஷரத்துடன் சேர்த்து எட்டெழுத்தாகிறது. இந்த எட்டெழுத்துக்களும் ஸ்ரீ கணேஸ்வரரது எட்டுவகை உருவங்களையும் எட்டுவகை சக்தி ரூபங்களையும் அஷ்டமா சித்திகளையும் கைக்கொண்டதாயிருக்கின்றன. இது, சித்தி முத்தி இரண்டும் தரவல்லது. சகல காரியங்களிலும் சமஸ்த பிதிபந்தங்களையும் போக்கிவிடக் கூடியது. தேவரிஷிகள் ஜீவஹிம்ஸையில்லாத புண்ணிய யாக காலங்களில் ஆரம்பத்தில் இந்த மஹா மந்திரத்தை யாக கர்த்தாவால் உச்சரிக்கச் செய்தபின் யாகம் ஆரம்பிப்பது வழக்கம். தேவர்களும், ரிஷிகளும், தங்கள் தங்கள் காரிய சித்திகளுக்காக இந்த மந்திரத்தை ஸ்மரணை செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். கஜமுகன் என்னும் அதிக பலமுள் ளஅடங்காத அசுரனொருவன் இந்த மந்திர சித்தியின் பலத்தால் ஸ்ரீகணஸ்வரப் பெருமானுக்கு அத்தியந்த சிஷ்யனாகவும் வாகனமாகவும் அமையப் பெற்றான். இதற்கு அதிதேவதை சூரிய பகவான், அபிமான தேவதை தேவேந்திரன் உபாசனா தேவதை பிரம்ம தேவர் அதிஷ்டான தேவதை ஸ்ரீ கணேஸ்வரர். ஒன்பதுகோடி ஜெபமுடிவில் சித்தியாகக் கூடியது.

## 9. ஸ்ரீ ராதாகிருஷ்ண நவாக்ஷரீ

இந்த மஹா மந்திரம் ஒன்பது எழுத்துக்களுடன் கூடியது. ஒவ்வொரு எழுத்துக்களும் ஞான பலமும் அவாந்தர பலமும் அதிகம் பெற்றது. ரிஷி, சந்தஸ், தேவதை இவைகளை உடையது. உத்தவர், விதுரர், அக்ரூரர் முதலிய பரம பக்த சிகாமணிகள் இந்த மந்திரத்தைக் கோடிக்கணக்காக ஜெபித்து ஜெகதீஸ்வரனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானை ராதா சொரூபத்துடன் தெரிசித்திருக்கிறார்கள்.



வைசம்பான மஹா முனிவரால் ஜெனமே ஜெய மஹாராஜன் உபதேசிக்கப் பெற்று உயர்ந்த பிரயோஜனத்தை அடைந்தான். பலபல பரீக்ஷைகளுக்குப்பின் பலன் தரக் கூடியது. இதற்கு அதி தேவதை ஸ்ரீ வியாஸ பகவான் அபிமான தேவதை நாரத மஹரிஷி, உபாஸனா தேவதை ராதாதேவி அதிஷ்டான தேவதை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பத்துக் கோடி ஜெப முடிவில் சித்தி பெறக் கூடியது.

## 10. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மந்திரம்

இந்த மஹா மந்திரம் ஆதி கிருத யுக்தில் பிரம்மதேவரின் மானஸ புத்திரர்களான சனகன் சனந்தன் சநாதனன் சனத்குமாரன் என்ற நான்கு பிரம்ம ரிஷிகளுக்காக ஸ்ரீ மஹாதேவரால் உபதேசிக்கப்பட்டிருப்பது. அந்த நான்கு ரிஷிகளும் இந்த மந்திரத்தை விதிப்படி ஜபித்து வாக்கு மனதுக்கெட்டாத பரப்பிரஹ்ம வஸ்துவை அடைந்திருக்கிறார்கள். இந்த மஹா மந்திரத்தை அத்வைத ஆசாரியார்களெல்லாம் அடிக்கடி ஜபம் செய்து வருவது வழக்கம். இந்த மந்திரத்தின் தலைவர் தெய்வமாக வும் ஆசாரியாரகவும் அமைந்திருக்கக் கூடியவர். இதற்கு அதி தேவதை நந்திகேஸ்வரர், அபிமான தேவதை சுப்ரமண்யர், உபாஸனா தேவதை சனத் குமாரர், அதிஷ்டான தேவதை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, பதினோரு கோடி ஜெபமுடிவில் சித்தி பெறக் கூடியது.

## 11. ஸ்ரீ ஹிரண்ய கர்ப்ப மந்திரம்

இந்த மந்திரம் சிற்சில வுபநிஷதங்களில் சொல்லப்பட்டிருக் கிறது. வாலகில்லிய மஹரிஷிகளும் தேவராஜாவும் சூர்ய பகவானும் மஹாத்மாவாகிய பிருகுவும் இந்த மந்திரத்தை அனுஷ்டானம் செய்து மேலான பிரயோஜனத்தை அடைந்திருக் கிறார்கள். இந்த மஹா மந்திரத்தை ஜெபம் செய்து கொண்டு வர வர வேத ரகஸ்யங்களெல்லாம் தானாகவே சுலபமாக விளங்க ஆரம்பிக்கின்றது. இந்த மந்திர சக்தியால் அநேக ரிஷி கூட்டங்கள் தங்களுக்குத் தெரியாத மஹத்தான ரகஸ்யங்களையெல்லாம்

கண்டுபிடித்திருக்கிறார்கள். வாதூலர் என்ற ரிஷிகுமாரர் இந்த மந்திரத்தைக் கோடிக்கணக்காக ஜெபித்து அந்தர்முகப் பிரஹ்ம நிஷ்டையை அடைந்ததுந் தவிர பகிர்முக அறுபத்து நான்கு சித்திகளையும் அடைந்தனர். ஹிரண்யகசிபு, இராவணன், காலகேயர்கள் முதலிய அசுரர்களும் இந்த மந்திர ஜெப்பிரவாக மேலீட்டால் பிரம்மதேவரின் பிரசன்ன ரூபத்தைத் தரிசித்திருக்கிறார்கள். இதற்கு அதிதேவதை பிருகு மஹரிஷி, அபிமான தேவதை காயத்ரி தேவி உபாஸனா தேவதை ஸரஸ்வதி தேவி, அதிஷ்டான தேவதை ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பர். இது பத்துக்கோடி ஜெப முடிவில் சித்தியாகிறது.

## 12. பரமபத துவாத சாக்ஷரம்

இந்த மஹா மந்திரம் ஏகாக்ஷரத்தோடு பன்னிரண்டு எழுத்துக்களை உடையது. உபநிஷத்துக்களிலும் பாகவதம் விஷ்ணுபுராணம் முதலியவைகளிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தர்முகம் பகிர்முகம் என்ற இரண்டு அனுகூலங்களையும் செய்யக் கூடியது. துருவன் என்ற ஐந்து வயது பாலகனுக்கு பிரஹ்ம ரிஷியாகிய நாரதரால் உபதேசிக்கப் பெற்று ஒரு வருஷ காலத்திற்குள் ஒருகோடி ஜெப முடிவில் ஸ்ரீ மஹா விஷ்ணுவைப் பிரத்யக்ஷமாக்கி வைத்தது. இதற்கு அதிதேவதை கருட பகவான், அபிமான தேவதை ஆதிசேஷன், உபாஸனா தேவதை மஹா லக்ஷ்மி, அதிஷ்டான தேவதை மஹா விஷ்ணு. பத்துக் கோடி ஜெப அந்தத்தில் சித்தி பெறக் கூடியது.

## 13. ஸ்ரீராம திரயோத சாக்ஷரீ

இந்த மந்திரம் ஏகாக்ஷரமில்லாமல் பதின்மூன்று அக்ஷரங்களோடு கூடியது. அதிக சக்தியுள்ளது. சிவாஜி மஹாராஜாவின் பரமாசாரியரும் மஹாராஷ்டிர தேச பரமபக்த சிகாமணியுமாகிய ராமதாஸ் ஸ்வாமிகள் இந்த மந்திரத்தை முறைப்படி ஜெபம் செய்து சித்தியடைந்திருக்கிறார். ஸ்ரீராமச்சந்திர பகவானையும் தரிசனஞ் செய்தார். இதற்கு அதிதேவதை ஆஞ்சநேயர், அபிமான தேவதை லக்ஷ்மணர், உபாஸனா தேவதை ஜானகீ, அதிஷ்டான தேவதை ஸ்ரீராகவர். பதின்மூன்றுகோடி ஜெபமுடிவில் சித்தி பெறக் கூடியது.



## 14. நவநவ திரீயாக்ஷரீ

இந்த மஹா மந்திரம் இருபத்தோரு எழுத்துக்களுடன் கூடியது. இதை சில ரிஷிகளும், பாஞ்சால தேச பக்திமானாகிய துளசீதாஸரும், ஆந்திரதேச மஹானாகிய ராமதாஸரும் இதை விடாது ஜெபித்து ஸ்ரீராமச்சந்திர பகவானது பரமகாருண்யத்திற்குப் பாத்திரர்களாயிருக்கிறார்கள். தண்டகாரண்ய மஹரிஷிகளும் சபரீதேவியும் இந்த மஹா மந்திரத்தை ஆறுகோடி ஜெபம் செய்தபின் ஸ்ரீராகவரைத் தரிசனம் செய்திருக்கிறார்கள். இது அதிக வீர்யமுடையது. இதற்கு அதிதேவதை ஆஞ்சநேயர், அபிமான தேவதை இளைய பெருமாள், உபாஸனா தேவதை சீதாப்பிராட்டி, அதிஷ்டான தேவதை ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி. ஏழு கோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.

## 15. பிரம்ம காயத்திரீ

இது மஹா மந்திரங்களுள் சிறந்தது. வேதங்களினின்று கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் போன்றது. பகிர்முக ஜோதி வடிவமான சூரிய பகவானை ஆதாரமாகக் கொண்டு அந்தர்முக பரப்பிரஹ்ம ஜோதியை அறிவிக்கக் கூடியது. சீக்கிரம் ஹிருதயத்தைப் பரிசுத்தப்படுத்தும் வல்லமையுடையது. பிரஹ்மத்தை அடைபவர்களுக்கு நேர் சாதனமானது. உத்தாலகர், மௌத்கல்யர், காஸ்யபர், ருஷ்யஸ்ருங்கர் முதலிய மஹரிஷிகள் இந்த மஹா மந்திரத்தை ரிஷி சந்தஸ் தேவதை இவைகளுடன் விதிப்படி ஜெபானுஷ்டானம் செய்து அபரோக்ஷ ஞானமடைந்திருக்கிறார்கள். தக்ஷிணம் உத்தரம் என்ற தேசபாகுபாடுகளால் இந்த மந்திரம் சில சில மாறுபட்டிருப்பது. பிராம்மணர்கள் மாத்திரம் அனுஷ்டிக்க அருகதையுடையது. இதற்கு அதிதேவதை பஞ்சாக்ஷரீ தேவி, அபிமான தேவதை அஷ்டாக்ஷரீ தேவி உபாஸனா தேவதை ஏகாக்ஷரீ தேவி, அதிஷ்டான தேவதை காயத்திரீ தேவி. இது நான்கு கோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.

## 16. ஸ்ரீ வேங்கடேஸ்வர திரயோத சாக்ஷரீ

இந்த மஹாமந்திரம் இரண்டு ஏகாக்ஷரத்துடன் சேர்ந்து பதின்மூன்று அக்ஷரங்களோடு கூடியது. சாம வேத சாகையான அதர்வசீர்ஷோபநிஷத்திலும் பிரம்ம கைவர்த்த புராணத்திலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜாபால மஹரிஷி, ஸனக்குமாரர், தும்புரு, ஸர்வாங்கர் முதலிய மஹரிஷிகளும் நாரதருடைய அம்ஸமாகப் பிறந்த சோழராஜாவான தொண்டமான் சக்கிரவர்த்தியும் பரம பக்தனாகிய குருவை நம்பியும் இந்த மந்திரத்தைக் கோடிக்கணக்காக ஜெபம் செய்து சர்வேஸ்வரனாகிய ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமானை தரிசனம் செய்திருக்கிறார்கள். விசிஷ்டாத்வைத ஸ்தாபகராகிய ஸ்ரீ ராமானுஜாசாரியார், ஸ்ரீ வேங்கடேஸ்வர அனந்தாழ்வார் சம்வாத விஷயமாகத் திருவேங்கட பருவதத்தின் ஏழாவது மலையில் காலால் ஊர்ந்து போகும்போது முழங்கால் முறிந்த காலத்தில் இந்த மஹா மந்திரத்தை ஒரு லக்ஷம் ஜெபித்தபின் ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பிரசன்னமாயிருக்கிறார். இதற்கு அதிதேவதை விஷ்வக்ஸேனர், அபிமான தேவதை ஆதிசேஷன், உபாஸனா தேவதை பத்மாவதி, அதிஷ்டான தேவதை ஸ்ரீ வேங்கடேஸ்வரர். ஆறுகோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.

## 17. ருத்திர காயத்திரீ

இந்த மந்திரம் ஏகதேசமாக சில வுபநிஷதங்களிலும் அதிகமாகச் சில சிவாகமங்களிலும் விளக்கிச் சொல்லப்பட்டிருக் கிறது. முடிவில் சதாசிவ சொரூபத்தை அறிவிக்கக் கூடியது. பிருங்கி மஹரிஷி, உமாபதி சிவாசாரியார் முதலியவர்கள் ஜெபித்துப் பிரயோஜனத்தை அடைந்திருக்கிறர்கள். இதற்கு அதிதேவதை பிருங்கி மஹரிஷி, அபிமான தேவதை ருத்திரன், உபாஸனா தேவதை மஹேஸ்வரீ, அதிஷ்டான தேவதை ஸ்ரீ சதாசிவன். ஒன்பது கோடி ஜெப முடிவில் சித்தியாகக் கூடியது.



## 18. கலிசந்தாரணம்

இந்த மஹா மந்திரம் முப்பத்திரண்டு அக்ஷரங்களோடு கூடியது. பிரகிருதிக்குப் பயப்படக்கூடிய சகலரும் இதை ஜெபித்து மேன்மையான பிரயோஜனத்தை அடைந்திருக்கிறார்கள். கிருதயுக ஆரம்பத்தில் நாரதர், வசிஷ்டர், அகஸ்தியர், பிரஹஸ்பதி முதலிய மஹரிஷிகள் தங்களது பரமபிதாவாகிய பிரம்மதேவரிடம் சென்று தரிசித்துக் கலியுகம் வந்தால் அதனாலுண்டாகுங் கஷ்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் தீமைகளும் எங்களைப் பீடிக்குமே, அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டியதென்று கேட்க, சாமவேதத்தில் கலிசந்தாரணவுபநிஷத்து என்று ஒன்றிருக்கிறது, அதில் கலி சந்தாரண மந்திரமென்பது பிரசித்தமும் ரகஸ்யமுமா யமைந்தி ருப்பது, அதை நீங்கள் ஜெபித்துக் கொண்டிருப்பீர் களானால் உங்களிடம் கலிபுருஷன் அணுக மாட்டானென்று பிரமதேவர் கூறி யிருக்கிறார். இதற்கு அதிதேவதை கருட பகவான், அபிமான தேவதை ஆதிசேஷன், உபாஸனா தேவதை மஹாலக்ஷ்மீ, அதிஷ்டான தேவதை ஸ்ரீ மஹா விஷ்ணு ஐந்து கோடி ஜெப முடிவில் சித்திபெறக் கூடியது.

## 19. பால ஸாரதா

இந்த மஹா மந்திரம் பதினான்கு அக்ஷரங்களோடு கூடியது. இரண்டு ஏகாக்ஷரத்தை உடையது. புத்தி சூக்ஷுமமில்லாதவர் களும் மனதில் வித்தை பதியாதவர்களும் இந்த மந்திரத்தை ஜெபித்து வந்தால் நல்ல பிரயோஜனத்தை அடைகிறார்கள் ஜாபால மஹரிஷி, கண்ணுவர், பிப்பலாயர் முதலியவர்கள் இந்த மந்திரத்தை ஜெபித்து மேலான பலனை அடைந்திருக்கிறார்கள். சில புராணங்களிலும் இதிகாசங்களிலும் இந்த மந்திரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது புத்தி மந்தத்தையும் தோஷத்தையும் போக்கக் கூடியது. இதற்கு அதி தேவதை சாவித்திரி, அபிமான தேவதை மாதங்கி, உபாஸனா தேவதை காயத்திரி, அதிஷ்டான தேவதை பால ஸரஸ்வதி. பதினோருகோடி ஜெப முடிவில் சித்திக்கக் கூடியது.

## 20. தத்தாத்திரேய மூல மந்திரம்

இந்த மஹா மந்திரம் ஒன்பது அக்ஷரங்களை உடையது. இரண்டு ஏகாக்ஷரங்களைச் சொந்தமாக கொண்டது. திரிமூர்த்திகளின் ஏககால சக்தியைத் தர வல்லது. கார்த்தவீர்யார்ஜுனன் இந்த மந்திரத்தை இருபது கோடி ஜெபம் செய்து தத்தாத்திரேய மஹரிஷியின் பிரசன்னத்தைப் பெற்றுச் சார்வ பௌமனானான். யயாதி மஹாராஜனும் முறைப்படி ஜபித்து மீளாத பரமபதத்தை அடைந்திருக்கிறான். இந்த மந்திரம் துரிதமாகப் பலனளிக்கக் கூடியது. இதற்கு அதிதேவதை கபில மஹரிஷி, அபிமான தேவதை அத்திரி மஹரிஷி, உபாஸனா தேவதை தன்வந்திரி, அதிஷ்டான தேவதை தத்தாத்திரேயர். இருபது கோடி ஜெப முடிவில் சித்தி பெறக் கூடியது.

-: ஓம் தத் ஸத் :-

**ஸ்ரீ விலக்ஷணானந்தர்**

## மத தத்துவமும் அதன் தருமங்களும்

மத தத்துவ சொரூபானுபவம் வேண்டு மென்று விரும்புகிற சிஷ்யனுக்குக் கண் திறந்துவிட உத்தம ஆசாரியன் வேண்டும். நம் முன்னோர்களான மஹான்களிடம் பின் சந்ததியார்களாகிய நாம் வணக்கஞ் செலுத்த வேண்டியது அவஸ்யம். அதுபோலவே, ஆசாரியரிடம் பக்தி வணக்கம் தாழ்தல் மரியாதை முதலிய தெய்வீக குணங்களைக் காட்ட வேண்டும். இந்தக் குணங்களில்லா விட்டால் நம்மிடம் மத விஷயானுபவம் பலமாக ஊன்றாது. ஆசாரியனுக்கும் சிஷ்யனுக்கும் இவ்வித சம்பந்தம் எங்கும் பலமாய் விளங்குகிறதோ அங்கேதான் மிகப் பலமான ஆத்மசக்தி பொருந்தியவர்கள் கிடைக்கிறார்கள். இவ்வித சம்பந்தத்தை வளர்க்காத தேசங்களில் மதாசாரியர்கள் சாமான்ய உபந்நியாஸங்களும் சரித்திரக் காலக்ஷேபங்களும் செய்பவராக மாத்திரம் விளங்குகிறார். அத்தேசங்களில் ஆசாரியர் தமக்குத் தகுதியான வெகுமதியை எதிர்பார்க்கிறார். சிஷ்யனும் தன் புத்திக்குள் பல விஷயங்களை நிரப்பிக் கொள்ள வேண்டுமென்று துடிக்கிறான். பூர்வஜென்ம நிஷ்காம புண்ணியமும் மோக்ஷத்தில் தீவிர இச்சையும் இறப்புப் பிறப்பின் விடுதலைப் புத்தியும் இல்லாததால் இன்னோர்களுக்கு இவ்வாறு நிலைமை ஏற்பட்டது. அதன்பின் இத்தகைய குரு சிஷ்யர்கள் தங்கள் காரியம் பூர்த்தியானதும் பிறிந்து விடுகிறார்கள். ஒருவரை ஒருவர் மறந்து விடுகிறார்கள். இந்த நிலையை ஆத்மப் பயிற்சி என்பது சூன்யமாகி விடுகிறது. வயிற்றுப் பிழைப்பு ஏமாற்றம் சுயநலம் அறியாமை இவைகள் மலிந்து கிடக்கின்றன. ஆத்ம தர்மம் இந்த ஆசாரியரிடமும் சிஷ்யனிடமும் அமைந்திருக்கவுமில்லை மற்றொருவரிடம் கொடுபடுவதுமில்லை. அவ்வித ஜனங்களுக்கு மதமும் ஓர் வியாபாரச் சரக்குப் போலாகிவிட்டது. திரவ்யமோ வெகுமதியோ கொடுத்து மத தர்மத்தைப் பெறுவதுபோன்ற வெட்கக் கேடு ஒன்றுமில்லை. பல ஜனங்கள் பணத்தைக் கொடுத்த மத விஷயத்தை அறிந்து விடலாமென்று நினைக்கிறார்கள். இவ்வளவு இலகுவாக மத தர்மம் கிடைத்து விடுமா? ஒருக்காலும் கிடைக்காது.

மனிதனுடைய அறிவும் ஞானமும் உன்னத பலனைக் கொடுக்கும்போது மத தர்மமாகின்றன. இந்தத் தர்மம் சாஸ்திரத்தைப் படித்து விடுவதால் அறிய முடியாது. பலபல பெரிய பண்டிதர்களை ஆசையும் அறியாமையும் நிறைந்தவர்களாகவே காண்கிறோமல்லவா?

உலகில் எல்லா மூலை முடுக்குகளிலும் நீங்கள் அலைந்து திரிந்தாலும் ஹிமாலய பருவத முழுதுஞ் சுற்றி வந்தாலும் உலகில் வேறெந்த மலைகளில் ஏறித் திரிந்தாலும் கடலினாழத்தைக் கண்டு பிடித்தாலும் ஒவ்வொரு மலைகளையுங் குடைந்து பார்த்தாலும் யாது பயனுண்டு. உங்கள் ஹிருதய கமலம் திறந்து அது மலர்ந்து ஆசாரியன் சமீபத்திலிருந்தாலன்றி ஆத்ம தத்துவ அனுபவம் உங்களுக்கு அகப்படா தென்பது நிச்சயம். ஆதலால், கடவுளருளால் உங்களுக்கு ஆசாரியர் கிடைக்கும்போது அவரிடம் குழந்தைப் போலப் பழகிக் கபடமின்றி நம்பிக்கையுடன் அவருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும். ஆசாரியருடைய ஹிருதயமும் செல்வாக்கும் உங்களிடம் தாராளமாக செல்லட்டும். அவரிஷ்டம் போலுங்கள் மனம் நடக்கட்டும். அன்னவரை கடவுளாகவே பாவனை செய்யுங்கள். ஆசாரியரிடம் இவ்வித அன்பும் பக்தியுங் கொண்டு மெய்ப்பொருளறிவை அடைய விரும்புகிறவர்கள் எவரோ அவர் மாத்திரமே தெய்வத் தன்மை ஆத்ம தத்துவம் முதலிய வற்றின் அரிய பெரிய ரகஸ்யங்களை அறிய முடியும். இறந்துபோன பின் முக்தி கிடைக்குமென்று கூறுகிற சாஸ்திரங்களையும் ஆசாரியர்களையும் மதங்களையும் நாம் நம்பவில்லை. இவ்வுல கிலேயே இவ்வுடம்போடிருக்கும்போதே உயிரோடிருக்கும் போதே ஆத்மானுபவம் ஞான மோக்ஷம் கிடைக்க வேண்டும். இதுதான் ஜீவன் முக்தி. ஸ்ரீ பகவத் கீதையின் அர்த்தமுமிதுவே.

பரமாத்மாஜீ

(2-9-1942)

தத்

ஓம் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர்

## அருளிச் செய்த

# உபவாஸம்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர் அருளிச் செய்த
# உபவாஸம்

இஃது பகவான் ஸ்ரீ விலக்ஷணானந்தர் திருக்கோயில் கொண்டுள்ள மேல்மாயில் "ஸ்ரீ நித்தியானந்த ஆஸ்ரமம் ஸ்ரீ விலக்ஷணானந்த சாது சங்க சபா" பக்தர் திரிபுர சுந்தரம்மாளால் சர்வஜித்து வருஷம் மாசி மாதம் மகா சிவராத்திரி பூஜையின்போது விநியோகிக்கப்பட்டது.

(கலியுகாதி 5020 சித்தார்த்தி வருஷம், தை மாதம், ஏழாம் நாள் மாலை பழையசேரி என்ற கிராமத்திலிருந்து ஓர் வைதீகப் பிராமணன் விலக்ஷணானந்தரை வினய சம்பத்தோடு விரிந்த புத்திநுட்ப அதிசாதுர்யத்துடன் கீழ்வருமாறு வினவினான்)

1. **பிராமணன்** : ஸ்வாமி இப்போது நான் பல பெரியவர்களாலும் சந்நியாசக் கூட்டத்தாராலும் கேள்விப்பட்டு சில பிரசினம் செய்து என் மனச் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டு போகலாமென வந்திருக்கிறேன். தங்களுடைய அபிப்பிராயம் எப்படியோ தெரியவில்லை.

**ஸ்வாமி** : பிராமண யதார்த்த வாதவடிவ சந்தேக நிவர்த்திக்காக வஞ்சகமில்லாமல் வந்தவன் மனம், முகம், நோக்கம், நடை, பேச்சு இவை களை உன்னிடத்திற் கண்டேனாதலால் இப்போதே பிரசினம் செய் சொல்லத் தயார்.

2. **பிராமணன்** : வேத வேதாந்த இதிகாச ஸ்மிருதி புராணங் களைக் கசடறக் கற்று அதன்படியே நிஷ்டை கூடிய பரம யோகிகள் உபவாசமிருந்ததாகவும் முன் திரேதா யுகத்தில் அம்பரீஷன் ருக்மாங்கதன், வல்லாளன் முதலிய மஹான்கள் உபவாஸ மிருந்தாகவும் சர்வசார சம்பன்னர்கள் கூறுகிறார்கள். புராணமும் அவ் வண்ணமே கூறுகிறது. இவற்றை யெல்லாம் பார்க்கும் போதும் தற்போதும் பல பாமரர்களும் சில பண்டிதர்களும், வித்வான்களும், சந்நியாசி களும் உபவாசம் அனுஷ்டிக்கப் பார்த்திருக் கிறேன். இவ்வகைப் பிரமாணங் களால் மோக்ஷ மடைய வேண்டுமானால் (உபவாஸம்) அனுஷ்டித்தல்லவோ தீர வேண்டும் போலிருக்கிறது. ஆதலால் ஸ்வாமிகள் அருள் புரிந்து உபவாஸம் என்ற பெரிய விஷயத்தை அடியேனுக்கு அனுக் கிரகஞ் செய்ய வேண்டும்.



**ஸ்வாமி** : பிராமணா நீ கேட்ட கேள்வி ஆதியில் அருந்ததி வசிஷ்டரைக் கேட்டதாயும் சீதை ஜனகரைக் கேட்டதாயும் விதுரன் மைத்திரே யரைப் பிரஸ்னம் செய்ததாயும் ஞானாப்பியாசி களுக்கு உபகாரமானதாயும் என் மனதிற்கு உற்சாகம், தைரியம், திடம், சந்தோஷம், ஊக்கம், கெம்பீரம் உண்மை, ஞானம், அந்தரங்க ஆத்ம உணர்ச்சி ஆதி மஹரிஷி களின் உபவாஸ ஞாபகம் வெளியில் புன் சிரிப்பு இவற்றைத் தருவனவாயிருக்கின்றன. ஆனால் உபவாஸம் என்ற பெரிய அறிய மகத் தான விஷயத்தைக் கேட்பதற்கும் அடைவ தற்கும் உனக்கு அதிகாரம் வாய்த்திருக் கிறதோ அல்லையோ என்றதை அறிந்து கொள்ளும் பொருட்டுச் சில கேள்விகள் கேட்கிறேன், தக்கவாறு பதில் சொல் பார்ப்போம்.

3. **பிராமணன்** : ஸ்வாமி அப்படியே தயார்

**ஸ்வாமி** : நீ யார்?

4. **பிராமணன்** : பிரத்ய காத்மா

**ஸ்வாமி** : நீ ஏன் இங்கு வந்தாய்.

5. பிராமணன் : என்னைக் காண.

ஸ்வாமி : நீ இருக்கும் இடமெது.

6. பிராமணன் : தெரியவில்லை.

ஸ்வாமி : நான் யார்?

7. பிராமணன் : நான்தான்

ஸ்வாமி : நீ யாருடன் வந்தாய்

8. பிராமணன் : என்னுடன்

ஸ்வாமி : உனக்கும் எனக்கும் என்ன பேதம்

9. பிராமணன் : இடையிலுள்ளது பேதம்

ஸ்வாமி : இடையிலிருப்பதென்ன.

10. பிராமணன் : தேவரீருக்கு ஞானமும் எனக்கு அஞ்ஞானமும்.

ஸ்வாமி : நீ இதுவரை கேட்டதும் இனி கேட்கப் போகிறதும் பரோக்ஷமா? அபரோக்ஷமா?

11. பிராமணன் : பரோக்ஷம்.

ஸ்வாமி : இனி என்ன செய்ய வேண்டும்.

12. பிராமணன் : தேவரீர் சொல்லுங்கள்.

ஸ்வாமி : நீ உபவாஸ ரூப அர்த்தங்களைக் கேட்டடை வதற்குத் தகுந்த அதிகாரம் வாய்ந்தவனென் பதிற் சந்தேகமில்லை. ஆதலால் நான் சொல்வதை விழிப்புடன் மனதைச் சாவதான மாக நிறுத்திக் கொள்.

ஸ்வாமி : நீ பிரஸ்னம் செய்



13. பிராமணன் : உபவாஸம் என்ற பதத்திற்குத் தாத்பரியம் என்ன?

ஸ்வாமி : உப - சமீபத்தில் வாஸம் செய்கிறது, வசிப்பது, இருப்பது.

14. பிராமணன் : எதன் சமீபத்தில் வாஸம் செய்வது, ஸ்திரீ, புத்திரன், செல்வம், மலை, ஆறு, குளம், காடு, குகை, ஆலயம், ஆகாரம், பூமி, அக்னி இவைகளின் சமீபத்திலா என்று கேள்வி.

ஸ்வாமி : அல்ல.

15. பிராமணன் : மற்றெதில்.

ஸ்வாமி : எந்த வஸ்துவின் பிரகாசத்தால் நீ பேசு கிறாயோ நான் சொல்கிறேனோ திரிமூர்த்திகள், திக் பாலகர்கள், சூரியன், சந்திரன் இவர்கள் சஞ்சரிக்கிறார்களோ சர்வபுவன தத்துவங் களும் நிலைத்திருக்கிறதோ எந்த வஸ்துவை மகத்துக்கள் வாசஸ்தலமாக வைத்துக் கொள்ளுகிறார்களோ அந்த வஸ்துவின் சமீபத்தில் வாசஞ் செய்வது.

16. பிராமணன் : அந்த வஸ்து எது?

ஸ்வாமி : பரமாத்மா.

17. பிராமணன் : இதென்ன பயமாயிருக்கிறது.

ஸ்வாமி : பிராமணா உண்மையான உபவாஸம் இது தான். இதை அனுஷ்டித்துத்தான் விஸ்வா மித்திரர் (நித்திய வுபவாஸி என்கிற) பட்டம் பெற்றார்.

18. பிராமணன் : இவற்றைப் பார்க்கும்போது பிரமாதமாயிருக் கிறதே.

ஸ்வாமி : உபவாஸம் பிரமாதத்தையுங் கடந்தது.

19. பிராமணன் : ஆத்மா எத்தனை உள்ளது.

ஸ்வாமி : ஒன்றுதான். கற்பனையால் பலவாகத் தோற்றும்.

20. பிராமணன் : அவற்றின் பெயர்களென்ன?

ஸ்வாமி : விஸ்வாத்மா, தைஜசாத்மா, பிராக்ஞாத்மா, பிராணாத்மா, அந்தராத்மா, மஹாத்மா, சூத்திராத்மா, பிரத்யகாத்மா, ஜீவாத்மா, துரியாத்மா, பரமாத்மா.

21. பிராமணன் : இவற்றில் எது மேலானது?

ஸ்வாமி : பரமாத்மா.

22. பிராமணன் : இவ்வளவு ஆத்மாவும் யாருடைய ஆதீனம்.

ஸ்வாமி : பிரஹ்மத்தின் ஆதீனம்.

23. பிராமணன் : எல்லா ஆத்மாவையும் ஒன்றாக காண்ப தெப்படி.

ஸ்வாமி : உபவாஸமிருந்தால் பார்க்கலாம்.

24. பிராமணன் : உபவாஸ லக்ஷணத்தைக் கூறுங்கள்.

ஸ்வாமி : பரமாத்மாவின் சமீபத்தில் வாஸஞ் செய்வது உபவாஸமென்று முன்னம் என்னாலே சொல்லப்பட்டதை விரித்துச் சொல்ல வேண்டியது உன்னுடைய பிரஸ்னத்தின் சாரமாகவும் என்னுடைய சத்திய கடமையாயு மிருக்கிறபடியால் கூற ஆரம்பிக்கிறேன். லம்பிகாயோகம், ஹடயோகம், ராஜயோகம், மஹாயோகம், திருகாளயோகம், சிவயோகம், நவகண்டயோகம், பரமாஅஷ்டீஸ்வர யோகம், அம்சாம்சயோகம், சிவண்டலயோகம், ராஜ யோகம், கெஜமார்த்தனியோகம், நிஜானந்த



யோகம், சகஸ்திரசாஸ்வத யோகம், சிவ ராஜாங்க யோகம், காலாஷ்டக யோகம் முதலிய யோகங்கள் அறுபத்து நான்கிருக் கின்றன. (அவற்றை இங்கு கூறச் சாவகாச மில்லை) மேற்கூறிய யோகங்களாலும் உப வாஸத்தை அனுஷ்டிப்பது சுலபம். ஆனால் இப்போது உன்னுடைய பக்குவத்துக்கேற்ப (பரமாகண்டல யோகத்தை உனக்குப்) போதிக்க ஆரம்பிக்கிறேன்.

25. பிராமணன் : பரமாகண்டல யோகத்தை அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்.

ஸ்வாமி : ஆரம்பத்தில் சத்துவ ஆகார புனிதனாய் ஈஸ்வர சிருஷ்டி வடிவ இயற்கை ஆகாரமான கனி, காய், கிழங்கு, பால், தேன் முதலிய வற்றை உண்டு சரீர சுத்தி செய்து மூலிகாரூடகற்பங்களால் ஸ்தூலத்தின் நாடி நரம்புகளை ஸ்திரப்படுத்தி வியாதியில்லாமல் இனி வராமற் செய்து கொண்டு, வந்தாலும் கவனிக்காமல் ஆக்கி கொண்டபின் மலைக் குகை, சமுத்திரக்கரை, கங்கை, காவேரி, சரஸ்வதி முதலிய நதி தீரங்களில் ஏகாந்தமாக இருந்து கொண்டு யாதொரு சிந்தனையு மின்றி வாக்கை மவுனமாக்கி இந்திரியங் களைத் தடுத்துப் பிராணனை விடாது மனதைப் பிரமரந்திரத்திற் பிடரி வழியாக ஏற்றும்போது தடைகளுண்டாகும். அவற்றில் மயங்காமல் லக்ஷியஞ் செய்யாமல் மேற் சென்றுப் பிரமசக்தியின் அம்சகுண்டலி சக்தியின் தாரணையால் உள்வாசல் வழி திறந்து அசையாது நிற்பதாகும்.

26. பிராமணன் : இந்த யோகத்தை இதற்கு முன் யார் யாருக்குச் சொன்னார்கள்?

ஸ்வாமி : பரசுராமர் பீஷ்மருக்கும், ஸ்ரீராமர் லக்ஷ்மணருக்கும், கிருஷ்ணன் உத்தவருக்கும், சீதை அனுமானுக்கும் கூறியிருக்கிறார்கள்.

27. பிராமணன் : இப்படிக் கூறியதால் நன்றாய்ப் புலப்படவில்லையே.

ஸ்வாமி : இப்போதே புலப்பட்டுவிட்டால் அப்பியாசம் வியர்த்தமாய் முடியுமே.

28. பிராமணன் : பின் எப்போது தெரியும்.

ஸ்வாமி : அப்பியாச முதிர்ச்சியால் விளங்கும்.

29. பிராமணன் : அதுவரை என்ன செய்கிறது?

ஸ்வாமி : இதுவரை என்ன செய்தாயோ அப்படி இருக்கிறது.

30. பிராமணன் : இந்த யோகம் முடிந்ததற்கென்ன அடையாளம்.

ஸ்வாமி : அப்புறம் உனக்கே தெரியும்.

31. பிராமணன் : அதை நீங்கள் இப்போதே சொல்லக் கூடாதோ.

ஸ்வாமி : சொன்னால் நீ யறிந்து கொள்ள முடியாது.

32. பிராமணன் : ஏன் அறிந்து கொள்ள முடியாது.

ஸ்வாமி : பக்குவமில்லாததினால்.

33. பிராமணன் : முன் பக்குவமிருக்கிற அதிகாரியென்று கூறினீரே.

ஸ்வாமி : அனுஷ்டிக்க மாத்திரம் நீ அதிகாரியென்று கூறினேன்.



34. பிராமணன் : பரமாகண்டல யோகம் பழகும்போது மனதும் பிராணனும் கலந்து பிடரி வழியேறும்போது சில தடைகளுண்டாகுமென்று கூறினீரே. அதை விவரமாகக் கூற வேண்டும்.

ஸ்வாமி : அத்தருணம் பலவித உலக போகங்கள் வலுவில் வரும். சித்தர்கள் எதிர்தோன்றி இடையூறு செய்வார்கள் மாயப் பெண் மயக்கும். இன்னும் பலவும்.

35. பிராமணன் : ஸ்வாமி அதற்கென்ன செய்வது.

ஸ்வாமி : யோகம் முடியும் வரை எது வந்தாலும் லக்ஷியஞ் செய்யாதிரு. அப்படி முடியவில்லையானால் என்னிடம் வா.

36. பிராமணன் : தடைகளுண்டாகும் போது நீர் எங்கிருப்பீர்.

ஸ்வாமி : இப்போது நான் எங்கிருக்கிறேனோ அங்கிருப்பேன். அல்லது எல்லா ஜீவர்களும் தங்கக் கூடிய உன்னுடைய சொந்தவூரில் (அதாவது பழைய சேரியிலாவது அல்லது உன்னிடத்திலாவது) தயாராயிருப்பேன்.

37. பிராமணன் : நீங்கள் சொல்வது ஆத்மாவைப்பற்றிக் கூறுகிறதாகவல்லவோ இருக்கிறது.

ஸ்வாமி : நான் ஆத்மாதானே.

38. பிராமணன் : விலக்ஷணானந்தர் என்ற நாமமுடைய இத்தூலம் எங்கிருக்கும்.

ஸ்வாமி : உனக்குத் தடை வருங்காலத்தில் நான் தூலத்துடன் வருகிறேன்.

39. பிராமணன் : அது உங்களுக்கு எப்படி தெரியும்.

ஸ்வாமி : நீ யேன் கேட்கிறாய்.

40. பிராமணன் : தெரிந்து கொள்ள.

ஸ்வாமி : இப்போது இதை உனக்குச் சொல்வதல்ல யோகத்தை முடித்துவிடு பின் பார்க்கலாம்.

41. பிராமணன் : இந்த யோகத்தை அனுஷ்டிக்கிறதற்கு அதி தேவதை ஒருவர் வேண்டுமே அவர் யார்.

ஸ்வாமி : சதாசிவம்.

42. பிராமணன் : நான் எப்போது இந்த யோகத்தை அப்பியாசிக்க ஆரம்பிக்கலாம்.

ஸ்வாமி : அடுத்த குருவாரம் காலை 5 மணிக்கு ஆரம்பித்து விடு

43. பிராமணன் : எவ்விடத்தில்.

ஸ்வாமி : மல்லிகார்ஜுன பருவதத்தில்.

44. பிராமணன் : அந்த மலை எங்கிருக்கிறது?

ஸ்வாமி : கோதாவரி நதி தீரத்திலிருக்கிறது.

45. பிராமணன் : அங்கே யாரிருக்கிறார்?

ஸ்வாமி : சில தபசிகளும் பற்பல யோகிகளும் இருக்கிறார்கள்.

46. பிராமணன் : அந்த மலைக்கு நீங்களெப்போது வருகிறீர்கள்.

ஸ்வாமி : நானும் சிலநாள் அந்த மலையிலிருக்க வேண்டியிருப்பதால் சித்திரை மாதம் 20ந் தேதி வருகிறேன்.

47. பிராமணன் : நான் போய் வரட்டுமா.

ஸ்வாமி : உடனே புறப்படு.



48. பிராமணன் : கையில் ஏதாவது கொஞ்சம் திரவியம் வேண்டாமா.

ஸ்வாமி : எதற்காக.

49. பிராமணன் : ஆகாரம் முதலியவைகளுக்கு.

ஸ்வாமி : இப்ப நினைத்துதானோ யோகியாகப் போகிறாய்.

50. பிராமணன் : பின் எப்படி?

ஸ்வாமி : சர்வ ஆசைகளையும்விட்டு ஏக வஸ்திரத் துடன் செல்ல வேண்டும்.

51. பிராமணன் : பசிக்கு ஆகாரம் வேண்டுமே.

ஸ்வாமி : அதற்கு வேண்டிய ஆள் இருக்கிறார்கள்.

52. பிராமணன் : அவர்கள் யார்?

ஸ்வாமி : சர்வ தேவர்களும்.

53. பிராமணன் : அவர்கள் ஏன் உதவி செய்கிறார்கள்.

ஸ்வாமி : ஈஸ்வர ஆக்யையால்.

54. பிராமணன் : நீங்களிதை எப்படி அறிந்தீர்கள்.

ஸ்வாமி : பெரிய மஹான்கள் மூலமாயும் சுருதி மூலமாயும் அறிந்தேன்.

55. பிராமணன் : கடைசியாகத் தங்களை நமஸ்கரித்துவிட்டு எழுந்து நின்றேன் விடை கொடுங்கள்.

ஸ்வாமி : யாரை நமஸ்கரித்தாய்.

56. பிராமணன் : ஆத்மாவை.

ஸ்வாமி : ஆத்மாவை நமஸ்கரித்தாயானால் நானும் நீயும் ஆத்மாதானே ஏன் நமஸ்கரித்தாய்.

57. பிராமணன் : நமது பாரத நாட்டு குரு சிஷ்ய பகிரங்க வழக்கம் அப்படியிருக்கின்றன.

ஸ்வாமி : நீ தெளிந்த பிராமணன்தான்.

**58. பிராமணன்** : ஸ்வாமி சில வைதீகர்கள் ஏகாதசி, சஷ்டி, சிவ ராத்திரி, பூசம் முதலிய காலங்களில் உபவாஸ மிருக்கிறார்களே அது உபவாஸமல்லவோ.

**ஸ்வாமி** : அவர்கள் ஆத்ம ஞானமல்லாத அனாத்ம பத்தி யால் தேகமே தானென்றவர்களான படியால் தேகத்தை வாட்டி ஆகாரமின்றிப் பொழுது போக்கி மொத்தமாக தின்று விடுவார்கள்.

**59. பிராமணன்** : அவர்களுக்கும் பலனுண்டோ?

**ஸ்வாமி** : உண்டு.

**60. பிராமணன்** : என்ன கிடைக்கும்.

**ஸ்வாமி** : செய்கிறவர்கள் அபிப்பிராயம்போல் கிடைக்கும்.

**61. பிராமணன்** : அது எனக்கு வேண்டியதில்லையோ.

**ஸ்வாமி** : வேண்டாம்.

**62. பிராமணன்** : வேண்டாமென்று யாராவது கூறியிருக் கிறார்களோ.

**ஸ்வாமி** : திருமங்கையாழ்வார் உலகத்தை நோக்கி ஜனங்களே சரீரம், இந்திரியம் பிராணன் முதலியவைகள் வாடிப்போகும்படி ஆகாரத்தைவிட்டு ஏன் அலைகிறீர்கள். உண்மையான உபவாஸம் ஸ்ரீமந் நாராயணனை இதய மத்தியில் தரிசிப்பதே யென்று கூறியிருக்கிறார்.

**63. பிராமணன்** : அப்படியிருக்க பலபேர் பட்டினி கிடந்து உபவாஸமிருக்கிறார்களே.

**ஸ்வாமி** : அறியாத குற்றத்தினால்.

**64. பிராமணன்** : நான் போகிறேன்.

**ஸ்வாமி** : ஆசிர்வாதம் போய் வா.

**65. பிராமணன்** : ஐக்கிய நமஸ்காரம்.

-: ஓம் தத் ஸத் :-

தத்

ஓம் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் அருளிய

## வசிஷ்ட பகவான்

# உபதேச மொழிகள்

## ஸ்ரீலஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் அருளிய

## வசிஷ்ட பகவான்

# உபதேச மொழிகள்

இஃது பகவான் ஸ்ரீ விலக்ஷணானந்தர் திருக்கோயில் கொண்டுள்ள மேல்மாயில் ஸ்ரீ நித்தியானந்த ஆஸ்ரமம் ஸ்ரீ விலக்ஷணானந்த சாது சங்க சபா பக்தரும் மேற்படி சபையின் உபதலைவருமான ல. வெங்கடாஜல கவுண்டரால் சர்வஜித்து வருஷம் கார்த்திகை மாதம் 12ந் தேதி பௌர்ணமி பூஜையின் போது விநியோகிக்கப்பட்டது.

ஸ்ரீமத் பகவானும் பிரஹ்ம ரிஷியும் சர்வசங்க பரித்யாகியும் ஆகிய வசிஷ்டர் அவதார புருஷராகிய ஸ்ரீராகவருக்கு உபதேசித் தருளிய ஞான வார்த்தைகள்.

ஸ்ரீ வைகுண்டாதிபதியாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி கிருத யுக ஆரம்பத்தில் தனது மானஸ புத்திரராகிய பிரம்ம தேவருக்கு க்ஷீராப்தியில் உபதேசித்தது.

பின்னால் திரேதாயுகாரம்பத்தில் பகவானாகிய ஹிரண்ய கர்ப்பரால் மஹா மேருவின் நிஷதமலைச் சிகரத்தின் முடியில் தன்னுடைய ஞான புத்திரனாகிய வசிஷ்டருக்கு உபதேசித்தது.

அதனப்பால் திரேதா யுகத்தின் கடைசியிலும், துவாபர யுகத்தின் ஆரம்பத்திலும் ஸ்ரீராகவரது பதினைந்தாவது வயதிலும் சித்திரை மாஸம் உத்திர நக்ஷத்திரம் உச்சஸ்தானத்தில் மஹாத்து மாவும் பிரஹ்ம ரிஷியுமாகிய விஸ்வாமித்திரர் தனது அந்தர்முக பிரஹ்ம நிஷ்டையில் ஸ்ரீராகவரது அவதார வைபவங்களை ஞான திருஷ்டியால் தெரிந்துக் கொண்டு அயோத்தியாபுரிக்கு வருவதும் மஹாராஜ ராஜேஸ்வர ஸ்ரீமான் தசரதச் சக்கிரவர்த்தி அவர்களின் ஏகாதிபத்திய தர்பார் ஸபா மண்டபத்தின் மத்தியில் ருஷ்யசிருங்க வாமதேவ அகஸ்திய பாரத்வாஜ ஆத்ரேய கிருஷ்ணத்வைபாயன கௌதம கண்ணுவ ஜாபால சதானந்த மைத்ரேய கௌண்டுண்ய பிப்பலாய கௌசிக அமார்கஜ அனரண்ய தூர்வாஸ ஜிஞ்சுமார சுக்கிர பிரஹஸ்பதி பிருகு ஆங்கீரஸ புலஸ்திய சுக மாரிசி



தத்தாத்திரேய யாக்ஞவல்கிய மாண்டவ்ய திரிதுல முதலிய பிரஹ்ம ரிஷிகளின் மத்தியிலும் விதேக ஜனக மஹாராஜன் குகுப்தன் குங்குமாரன் ரோமபாதன் முதலிய ராஜரிஷிகளின் மத்தியஸ்தானத் திலும் உபதேசிக்கப்பட்ட அனாதி அத்யாத்ம உபதேச மொழிகள் :

**ஹே, அவதார அதி அத்புத லாவண்ய சுகுமார ஸ்ரீராகவா :**

1. பூர்வ ஜென்மாந்தர ஸ்தூல சரீர கர்மத்தினால் அமைந் திருக்கப்பட்ட மனைவியினிடத்திலும், குடும்ப விவகாரத் திலும், யாதொரு பற்று மில்லாதிருந்துக் கொள்ள வேண்டும்.

2. எந்தவிதமான சுக துக்கங்கள் ஹிருதயத்தில் வந்து தாக்கினா லும் யாதொரு கலக்கமுமின்றிச் சமத்துவ புத்தியுடனிருந்து கொள்ள வேண்டும்.

3. தன்னுடைய மனத்திற்குப் பிடிக்காததும் பொருத்தமில்லாத துமான இடங்களையும் காரியங்களையும் பிரஜைகளையும் உடனே விட்டுவிட வேண்டும்.

4. சத்தியமான தர்மத்திற்கு விரோதம் வருமென்று தெரிந்தால் அந்த ஸ்தானத்திலிருந்து அப்போதே விலகிவிட வேண்டும்.

5. அபேதமாகத் தோற்றப்பட்ட ஹிருதயத்தையுடையவர் களையும், யாதொரு களங்கமு மில்லாத இடங்களையும், காரியங்களையும் அளவுக்கு மீறின இடையூறுகள் வந்தாலும் விட்டுவிடக் கூடாது.

6. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் மத்திலியிருக்கப்பட்ட மஹாமாயை சிநேகம் பண்ணியோ (அல்லது எதிர்த்தோ) ஜெயமடைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

7. எது நித்தியம் எது அநித்யம் எது எப்போதும் நம்மை விட்டு மாறாதது எது மாறுவது என்பதைப்பற்றி அடிக்கடி விசாரிக்க வேண்டும்.

8. பிரம்ம தேவரின் சத்திய லோகத்தின் சிம்ஹாஸனத்தின் பதவியும் தேவேந்திரனது பீட சிம்ஹாஸனமும் அதிலுள்ள போகங்களிலும் கொஞ்சங்கூட இச்சையில்லாமல் ஜோதீ

ஸ்வரூபமாகிய பரமாத்மாவின் சாக்ஷாத்காரமே வேண்டுமென்று தீவிரமாய் எண்ண வேண்டும்.

9. அடிக்கடி பிரபஞ்ச ஏகாந்தத்தையும் அந்தர்முக துரிய துரியாதீத ஏகாந்தத்தையும் பழகி வரவேண்டும்.

10. எப்போதும் ஜனக்கூட்ட மில்லாத இடத்திலேயே வசித்து வரவேண்டும்.

11. பகிர்முக விருத்தியோடு கூடிய பிரபஞ்சப் பிரஜைகளது சந்தடியினின்று விலகிவிட வேண்டும்.

12. பரமாத்ம சொரூபத்தின் சமாதி ஸ்திதியின் எதார்த்த அனுபவத்தை இடைவிடாமல் அனுபவித்து வரவேண்டும்.

13. சத்தியப் பிரஹ்ம ஞான பிரத்யக்ஷ அனுபவத்தின் தீவிர இச்சையினால் புருஷப் பிரயத்னம் செய்து பிரஹ்ம வஸ்துவை யடைந்து மீண்டும் மனோவிருத்தி பிரபஞ்ச திருஷ்டியில் இறங்கினால் திரும்பியும் அந்த மனோ விருத்தியை பிரஹ்ம வஸ்துவுடன் சேர்த்துப் பழகி வரவேண்டும்.

14. சத்திய ஸ்வரூபியாகிய ஹே ராமச்சந்த்ர தேவ, மஹம்மேரு பருவத சிகரத்தில் ஏகாந்தமாய் மனுஷ்ய சஞ்சார மில்லாத விஸ்தாரமான வனாந்தரத்தின் மலைக்குகையில் புலி, கரடி, சிம்ஹம் முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கக் கூடிய இடத்தில் யாதொரு விதமான ஆகாரமு மின்றி காற்று, ஜலம், இவைகளைப் பக்ஷணம் செய்து கொண்டு இருக்கப்பட்டவர்களில் முழு அஞ்ஞானி யுண்டு.

பெரிய நகரங்களில் ராஜ ராஜேஸ்வர விஸ்தார வீதியில் ஏழாவது உப்பரிக்கையில் அம்ஸ தூளிகா மஞ்சத்தின் மீது சயனித்துக் கொண்டிருக்கப் பட்டவர்களில் பற்றற்ற சர்வ சங்க பரித்யாக மஹாத்மாக்களுண்டு.

வெளிக்காரியங்களைக் கொண்டு உட்காரியங்களை நிச்சயித்து விடாதே. செய்யுங் கர்மங்களெல்லாம் சர்வேஸ்வரனது



செயலென்னும் பிராரப்த வசமாய் பகவானால் செய்விக்கப்படுகிறதென்றும், நிச்சயமாய் நினை.

இவ்விதமான அதி அத்யத்புத அபுரூப ஆச்சாரிய அதிகோலாகல அதி ரமணீய அத்யாத்ம அதிரகஸ்ய அவாங்மனோவகோசர ஞானசுத்த சத்துவ குணங்களைப் பழகி வந்தால் சகலாதீத குணாதீத ஞானதீத சுகாதீத சத்திய சாம்ப்ராஜ்ய பரதத்துவ வஸ்துவை அடைவதற்கு யாதொரு தடையுமில்லை. இதைவிட்டுவிட்டு அனாத்ம அசாஸ்தரக் குப்பைகளைத் தாராளமாகப் புரட்டிக் கொண்டு வீண வாதங்களைச் செய்துக் கொண்டு புறப்பட்டவர்கள் எந்தக் காலத்திலும் உண்மையை அறியப் போவதில்லை.

ஹே, அமானுஷ தேவத்வ ரகு குலோத்தம, எதார்த்தமாக பரமாத்மாவை அறிய வேண்டிய எண்ணமிருந்தால் அதிக சாஸ்திரங்களை கற்றுக் கொண்டிருக்க வேண்டிய அவஸ்யமில்லை. ஒரு சாஸ்திரத்தில் எதைச் சொல்லுகிறதோ அதையேதான் சகல சாஸ்திரங்களும் திருப்பித் திருப்பிச் சொல்லுகின்றன. இவ்வாறு சர்வக்ஞ மஹரிஷிகளால் கூறப்படுகிற வேத வாக்கியங்களாகும்.

இவ்வாறு ஞான வாசிஷ்டமென்று பெயர் கொண்ட விஸ்தாரமாகிய ஞானமென்னும் க்ஷீராப்தியினின்று தவறி மேலெழும்பிய சிறு திவலை போன்ற ஞானோபதேச வாக்கியாமிர்தஸ்வரூபம்.

முற்றிற்று.

**விலக்ஷணானந்தர்**

-: ஓம் தத் சத் :-

5931-4-7-25 குருநாள் மாலை 20 நாழிகை

# ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ அவர்கள் அருளிச் செய்த

# எதார்த்த ஞான வாக்கு

இஃது பகவான் ஸ்ரீ விலக்ஷணானந்தர் திருக்கோயில் கொண்டுள்ள மேல்மாயில் ஸ்ரீ நித்தியானந்த ஆஸ்ரமம் ஸ்ரீ விலக்ஷணானந்த சாதுசங்க சபா பக்தர் குட்டி. ராமசாமி கவுண்டரால் 5-4-1947 பௌர்ணமி பூஜையின்போது விநியோகிக்கப்பட்டது.

1. புருஷர்களாயினும், ஸ்திரீகளாயினும் அவரவர்கள் சரீரங்களுக்குள் ளிருக்கிற சத்துவாதீதமாகிய தன்னை அனுபவத்திலறிந்து கொள்ளாவிடில் அடிக்கடி பலவித துன்பங்களுக்கு ஸ்தானமாகிய ஜென்ம மரணம் மாறாமல் வந்து கொண்டேயிருக்கும்.

2. எத்தனை தேச யாத்திரை மூர்த்தி தெரிசனம், தீர்த்த ஸ்நானம் செய்தாலும், வேதவேதாந்த சாஸ்திரங்களை அளவறக்கற்று, அவற்றை பலவித தர்க்க யுக்தி சாமார்த்தியங்களோடு பல்லாயிரம் சிஷ்யர்களுக்குப் போதிக்கும் தன்மை அருமையான அஷ்டமா சித்திகள் பெற்றிருந்தாலும் மூலப் பிரகிருதியின் ஹம்ஸரூபிகளான ஜன்ம மரண துக்கம் மாறப் போவதில்லை.

3. உடல், உயிர், திரவ்யம் இந்தவித சம்பந்தங்களை அறவேயொழித்து வெளித்துறவு பூண்டு பல சிஷ்யர்களுக்கு ஆசாரியனாகி, உலக அரசர்களும், பிரஜைகளும் கொண்டாடும்படியாய் விடுவதனால் ஆத்ம பிரஹ்மஞானம் வந்துவிடப் போவதில்லை. ஜன்ம, மரண, துக்கம் நாசமாக்க மாட்டாது.

4. தம்மை அனுபவத்திலறிதலென்னுமோர் நிலையில்லாவிடில் அடிக்கடி வேறு வேறு உடம்புகளில் போகவும் வரவுமாயிருக்க வேண்டுமேயொழிய வேறு வழியில்லை.



5. வாஸ்தவமாக சகல கட்டுப்பாடுகளையும் அறுத்தெறிந்து பூரண ஞான சுகத்தை அடைய வேண்டுமானால் வெளிவேஷமான எக்காரியங்களாலும் எப்படி முடியும்? உண்மையாகத் தன்னை யறிதலே சிறந்த வழி.

6. ஏதேது எப்படி யிருந்தால் நமக்கென்ன நாம் நம்மை அனுபவத்திலறிந்து அந்தர் முகத்தில் நிலைத்தே தீர்வோமென்று துணிவு கொண்டவன் மறுபிறப்பற்றவனாகிறான்.

7. இறப்புப் பிறப்புக்குப் பயப்படாமல் வேண்டிய சாஸ்திரங்களைப் புரட்டிப் புரட்டிக் கொண்டு அதிலே தர்க்கஞ் செய்து வரக்கூடிய பிரஜைகளுக்குப் போதித்துக் கொண்டிருக்கக் கூடிய சாஸ்திரமலடனை முழு மூடனென்று மஹான்கள் சொல்லுகிறார்கள்.

8. மாம்ஸ வடிவமான உடம்பைத் தானென்கிற அறிவையொழித்துத் தன்னையறியாவிடில் திரிநேத்திரதாரியாகிய பரமசிவனும், ஹிரண்ய கர்ப்பரும், ஸ்ரீமந் நாராயணனும் பிரசன்னமானாலும் ஜன்ம மரணம் ஒழியப் போவதில்லை.

9. சகல மதங்களும், அதன் கட்டுப்பாடுகளும், அதன் ஆரம்ப மத்திய முடிவுகளும், சகலவித உலகபோகங்களும், சாஸ்திரங்களும், எந்தவிதமான பந்தங்களும், தன்னையறிந்த மஹாத்மாவைக் கட்டுப்படுத்த முடியாது.

10. முதலில் பிரஹ்மானுபவத்தை அறிந்து கொண்டால் சகல நிலைமைகளும் தானே விளங்கும் வரவேண்டியதெல்லாம் வந்து விடும். போக வேண்டியதனைத்தும் போய்விடும். நிலைக்க வேண்டியது மட்டும் நிலைத்திருக்கும்.

11. ஹிரண்யகர்ப்பன் ஆனந்தத்திற்கு மேல் கோடி கோடி பங்குள்ளதும் அதிக ஆச்சரியமும், வெளியில் சொல்ல முடியாததுமான பிரஹ்மானந்தத்தை அனுபவிப்பதற்கு முதலில் சகலவிதமான வெளிப்பற்று, உட்பற்றுகளை விட்டு விட்டால்தான் அனுபவமாகும்.

12. நமக்கு ஒன்றும் வேண்டாமென்பதை ஞானமாகவும், தெய்வ சம்பத்தாகவும், வேண்டும் என்பதைப் பெரிய வியாதியாகவும், அசுர சம்பத்தாகவும், நினைப்பவர்களுக்குச் சீக்கிரம் ஞானோதய முண்டாகும். பரிசுத்த தேவர்கள் ஆச்சரியப்படு வார்கள்.

13. ஆசை, வீண் நினைப்பு, வீண் வார்த்தை, வீண் செய்கை, இவைகளுடையவர்களிடம் இருந்து விலகியிருப்பது விவேகிகளுக்கு அழகு.

14. எப்போதும் மனிதர் சங்கத்திலிருந்து விலகியிருப்பது மோக்ஷ இச்சையுள்ளவர்களுக்கும், அப்பியாசிகளுக்கும், அனுபவி களுக்கும் லக்ஷணம்.

15. மரணம் வரை வேதவேதாந்த சாஸ்திரங்களைக் கற்றுவிட்டுத் தன்னையறியாமல் வாசனையற்ற முருங்கைப்பூப்போல நின்றுவிடக் கூடாது.

16. தாய், தந்தை, புருஷன், புத்திரன், மனைவி, சுற்றத்தார், அரசன், குலகுரு, குலம், ஜாதி முதலிய எவறாயிருந்தாலும் மோக்ஷ ஞான மார்க்கத்திற்கு விரோதமாயிருந்தால் விலக்கிவிட வேண்டும்.

17. சமஸ்த சுருதிகளும், உபநிஷத் புருஷனும் இன்னும் சத்திய சொரூபமான பிரஹ்மத்தை அறிய முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றன வென்று தெரியும்போது அந்த சுருதிகளைக் கற்றதினாலெப்படி உண்மையை அறிய முடியும்.

18. மாறாத பேரின்பம் நமக்குள்ளேயிருந்தும் அதை விட்டு விட்டு மாறுகிற இன்பத்திற்காக ஊரூராக அலைபவர்களை முழு மூடர்களென்று ஏன் சொல்லக் கூடாது.

19. கடவுளை அறிவதற்கு விரோதமான தெய்வங்கள், ஆசாரியர்கள், மதங்கள், தேசங்கள், பிரஜைகள், பந்துக்கள், சிநேகிதர்கள், அரசர்கள், பழக்கங்கள், தோற்றங்கள், நினைப்புகள், செய்கைகள், ஆகாரங்கள் இவைகளை முன் பின் ஆலோசியாமல் விட்டுவிட வேண்டும்.



20. யாகாதி கர்மங்களாலும், தீர்த்த யாத்திரையினாலும் வேதாந் தங்களை அபரிமிதமாக்கக் கற்றதனாலும், பெரிய மடாதிபதி யாய் கோடிக்கணக்கான சிஷ்யர்களுக்கு ஆசாரியனாகி விட்டதனாலும், அளவற்றதானங்களாலும், தவங்களாலும், பாராயண ஜெபங்களாலும், விரதாதிகளாலும், ஹோமங் களாலும், தத்துவ விசாரணைகளாலும் சகலவித ஆஸ்ரமங் களாலும் ஜாதிகளாலும், பிரஹ்மத்தை அறிந்து விடலா மென்ற பிரயோஜனமற்ற எண்ணங்களை விட்டொழியுங்கள்.

21. வாஸ்தவத்தில் கடவுளை அறிய விரும்பினால் மனதை எல்லாவிதப் பொய்களிலிருந்தும் மீட்க வேண்டும்.

இப்படிக்கு

**விலக்ஷணானந்தர்**

5-8-31

புதன் பகல் 15 நாழிகை

## ரேணிகுண்டா, ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ இராமாநுஜம் ஐயா அவர்களுக்கு உபதேசித்தது.

1. கோவில்களுக்குள் உன்னதமான கௌரவம் பெற்றது மனிதனது ஆத்ம ஸ்தானமே.

2. ஆத்ம நிலையில் நிற்கும் வாழ்க்கையே வாழ்க்கை. மற்ற நிலையிலுள்ள வாழ்க்கையெல்லாம் பிணமேயாம்.

3. ஒரு மனிதன் தீமையை செய்யும்போதெல்லாம் அவனது ஜீவ சக்தி குன்றிக் கொண்டே வருகிறது.

4. எமன் என்ற தேவதை ஒன்றுண்டு. அதில் முதலில் இறந்த மனிதன் அவனென்பது புராண கதை.

அவன் சொர்க்கலோகஞ் சென்ற பிதுர்தேவதையானான், பிதுர்க்களென்பவர் தெய்வீகத் தன்மை வாய்ந்த நமது முன்னோர்களின் ஆத்துமாக்கள். நல்லோர்களெல்லோரும், மரணத்திற்குப் பின் அவர்களுடன் நெடுங்காலம் வசிக்கச் செல்கின்றனர்.

இயமன் மிகப் பரிசுத்த குணம் வாய்ந்த தெய்வீகப் பிராணி

5. ஹ்ருதயம் ஆடாது நின்று விட்டால் அதனுள் மறைந்து பிரகாசிக்கிற ப்ரஹ்ம ஜோதி பிரசன்னமாகிறது.

6. ஹ்ருதயத்தில் எவரிடத்தும் விஸ்வாஸ புத்தியும், துவேஷ எண்ணமும், கொள்ளாதவரிடம் கல்பக விருக்ஷ தேவதை குடி கொள்ளுகிறது.

7. நம்மை எவரும் விஸ்வாஸ புத்தியுடன் மரியாதை செய்தால் அவர்களிடம் பிரீதியும், துவேஷ புத்தியுடன் நிந்தித்து அவமரியாதை செய்தால் துவேஷமுங் கொள்வது கூடாது.

8. நம்மையொருவன் துவேஷங் கொண்டு நிந்தித்தால் அது பெரிய நன்மைக்கு அடையாளமென்றும், நமது பாப சக்தியின் அணுக்கள் குறைந்து போவதற்கேதுவென்றும், நம்மீது கருணை கொண்ட சர்வேஸ்வரன் நமது ஞான மோக்ஷ நன்மையை யுத்தேசித்து நிந்திக்கச் செய்தாரென்றும் எண்ண வேண்டும்.



9. துவேஷித்தவர்களிடம் பதில் துவேஷமாவது நிந்தித்தவர் களிடம் பதில் நிந்தையாவது செய்வது கூடாது.

10. யதார்த்தமான ஹ்ருதயத்தில் ராக த்வேஷமில்லாதவர்கள் எது வேண்டப்பட்டாலும் அது உடனே கிடைக்கப்படும்.

11. மனிதர் சந்தடியின்றி தனித்திருந்து ஹ்ருதயத்தையும், அதனுள் மறைந்திருக்கிற ஆத்மாவாகிய தன்னையும், விசாரணை செய்து பிரத்தியக்ஷமாக்க முயன்று வர வேண்டும்.

12. அதிருஷ்ட வசத்தால் உத்தம ஞானியர் காணக்கிடைத்தால் வீண் வாதங்களையும் சாஸ்திரக் குப்பைகளையும் கேட்டுக் கொண்டிராமல் தெய்வீக சாந்நித்தியத்தையும் இறப்புப் பிறப்பு இல்லாத வழியையும் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

13. வார்த்தை, முகம், நடை, சரீரத் தோற்றம், கண்பார்வை இவைகளைக் கொண்டு ஞானிகள் என்று நிச்சயமாகக் கண்டுக் கொள்ளலாம்.

14. துவைதியாகவும், அத்வைதியாகவும், பக்தனாகவும், ஞானி யாகவும், யோகியாகவும், தபசியாகவும் இருக்கப்பட்ட ஒரு புருஷனே சத்தியத்தை யறிந்தவன்.

15. இறந்துபோனபின் மோக்ஷங் கிடைக்கிற தென்கிற மதத்தில் எனக்கு நம்பிக்கை யில்லை. இவ்வுடம் பிருக்கும் போதே மோக்ஷ நிலையடைவதே ஜீவன் முக்தி.

16. அநித்திய வஸ்துக்களின் உதவியைக் கொண்டு நித்திய வஸ்துவை அடைய எண்ணுவது வெட்கமான காரிய மல்லவா?

17. ஆத்ம சிந்தனை உத்தமம், சாஸ்திர சிந்தனை மத்திபம் மந்திர சிந்தனை அதமம், தீர்த்த யாத்திரை சிந்தனை அதமாஅதமம் என்று ஞான புருஷன் கூறுகிறான்.

18. நாம் நினைக்கிற ஒவ்வொரு நினைப்பும், ஒவ்வொரு பார்வையும், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு கேள்வியும், ஒவ்வொரு நடையும், அளவுக்குட்படாது மீறிப் போகுமானால் அவற்றின் கர்மபந்தங்கள் நம்மைப் பலமாகப் பீடித்து விடும் அல்லவா?

**ஸ்ரீ விலக்ஷணானந்தர்**

-: ஓம் தத் ஸத் :-

தத்

ஓம் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ

திருவாய் மலர்ந்தருளிய

# ஜிஞ்ஞாசு ரத்நம்

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ திருவாய் மலர்ந்தருளிய

# ஜிஞ்ஞாசு ரத்நம்

இஃது பகவான் ஸ்ரீ விலக்ஷணானந்தர் திருக்கோயில் கொண்டுள்ள மேல்மாயில் ஸ்ரீ நித்தியானந்த ஆஸ்ரமம் ஸ்ரீ விலக்ஷணானந்த சாதுசங்க சபா பக்தர் கே.டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியால் 6-1-1947 பௌர்ணமி பூஜையின்போது விநியோகிக்கப்பட்டது.

## ஜிஞ்ஞாசு ரத்நம்

ஜிஞ்ஞாசுக்கள் எந்த வஸ்துவை இச்சிக்கிறார்களோ, இச்சித்தபின் எதை அடையப் போகிறார்களோ, எதை அடைந்தபின் இன்னொன்றை அடைவதில்லையோ அத்தகைய ஜீவப்ரஹ்ம ஐக்கிய காலாவதி ரூப சூக்ஷுமானந்த சாக்ஷி சைதன்ய சாக்ஷாத்கார வடிவ பிரஹ்ம சொரூபத்தினது சச்சிதானந்த பாதங்களை இரண்டறத் துதிப்போம்.

ஹே முமுக்ஷுக்களே!

சர்வ வேதாந்தங்களும் பிரதிபாதிக்கப்படுகிற பிரஸ்தானம் மூன்று. அவை : உபநிஷத்துக்கள், பிரஹ்ம சூத்திரம், ஸ்ரீ பகவத் கீதை இவைகளில் யதார்த்தமும் அவசியமுமான விஷயங்கள் பதினாறு.

அவைகளாவன :

1. அஞ்ஞானம் 2. சகாம கர்மம் 3. நிஷ்காம கர்மம் 4. சித்த சுத்தி 5. நித்தியாநித்திய வஸ்துவிவேகம் 6. இகபரபோக விராகம் 7 சமாதி ஷட்சம்பத்து 8. முமுக்ஷுத்வம் 9. குரு தரிசனம் 10. சிரவணம் 11. மனனம் 12. நிதித்தியாசனம் 13. சமாதி 14. நிஷ்டை 15. ஜீவன் முக்தி 16. விதேக முக்தி.



1. **அஞ்ஞானம்** : யதார்த்தமான பிரஹ்ம சொரூபத்தையும் அதன் நியமமல்லாத நம்முடைய சொரூபத்தையும் நமக்கு அன்னியமாகத் தோற்றப்பட்ட மனம், சரீரம், உலகம் முதலியவை களின் சொரூபங்களையும் அதனதன் பேதங்களையும் தோற்றவிடா மற்றடுத்துக் கொண்டிருக்கிறதெதுவோ அதுவே அஞ்ஞானம். மனதையும் அஞ்ஞானமெனலாம். இல்லாத வஸ்துவையும் அஞ்ஞானமென்பர். சங்கற்பம், மாயை தமசு அனர்த்தம் மோகம் மலம் பந்தம் அவித்தை முதலியவைகளும் அஞ்ஞானமென்று சொல்லலாம். அவை அஞ்ஞானத்தின் பரியாய நாமங்கள்.

வேதாந்த சம்பிரதாயமான கிரந்தங்களில் அஞ்ஞானத்தை விவரிக்கிற வழக்கமிதுவரை அதிகமா யில்லாததனால் இவ்விதம் சுருக்கிக் கூறப்பட்டது.

2. **சகாம கர்மம்** : பொதுவாக அழிந்து போகக் கூடிய பதார்த்தங்களை இச்சித்து செய்யப்பட்ட புண்ணிய கருமங்களெல் லாம் சகாம கர்மமாம். மோக்ஷமடையுமிச்சையின்றி புண்ணிய கருமம் செய்வதும் புத்திரனுண்டாக வேண்டி ஈஸ்வரனை பிரார்த்திப்பதும் அதனிமித்தம் ராமேஸ்வர முதலிய தீர்த்த யாத்திரை செய்வதும் பொருள் மனைவி மனை தேசம் குலம் ஜாதி பூமி முதலிய அனித்திய பதார்த்தங்களை இச்சித்து செய்யப்பட்ட புண்ணிய கருமங்களெல்லாம் சகாம கருமமென்று சொல்லலாம்.

3. **நிஷ்காம கர்மம்** : துக்கமில்லாத சுயசொரூபமான ஆத்ம சாக்ஷாத்காரத்தை மாத்திரம் இச்சித்து திரிவித கரண சுத்தியோடு சாத்வீக தைரியத்துடன் செய்யப்பட்ட புண்ணிய கருமங்களெல் லாம் நிஷ்காம கர்மமாகும். வருணாச்சிரம தருமங்களுக்கு அனுசரித்த விதிகள் நியமங்கள் இவைகளுக்கனுசரித்த புண்ணிய கருமங்களை விதிப்படிச் செய்து அவற்றின் பிரயோஜனத்தை சகுணப் பிரம்மர்களான **விராட்டு விஷ்ணு சிவன் மஹேஸ்வரன் சதாசிவன் கணபதி சுப்ரமண்யன்** முதலிய மூர்த்திகளுக்கு அர்ப்பணம் செய்தலும் அல்லது நிஷ்காம புண்ணியந் தொடங்கி முடியும்வரை அச்சங்கற்பமன்றி வேறு யாதொரு சங்கற்பமுமின்றி யிருத்தலும் எக்கருமங்களியற்றும்போதும் கருமமும் கருமகர்த்தா வும் கர்மம் செய்விக்கிறவனும் கர்ம பலமும் பலப்பிரயோஜனமும்

அனுபவத்தோற்றமும் நானே அல்லது நமது சங்கற்பம் அல்லது மாயை அல்லது கடவுள் அல்லது பிரம்மம் என்று நிச்சயித்து உறுதியாக எண்ணுவதும் நிஷ்காம கருமமாகும். சுபாசுப கருமங்களைச் செய்கிறபோது அவற்றை ஈஸ்வரார்ப்பணம் செய்தல் மத்திம நிஷ்காம கர்மமாகும். உலகமெல்லாம் நம்முடைய சொரூபமென்று நினைப்பதும் சர்வமும் நானென்னும் அனுபவ நினைப்பும் எக்காலத்தும் ஏகாந்தமாயிருக்க எண்ணுவதும் சர்வ சங்கங்களின் நிவிர்த்தியும் உத்தம நிஷ்காம கர்மமாகும். பின்பு யாதொரு காரணத்தால் எல்லாமாயு மல்லாதாயுமிருக்கின்ற பிரம்ம சொரூபத்தில் நின்றும் அன்னிய மல்லாத நான் என்னும் விசிஷ்டாத்வைத முறைப்படி நிச்சயம் வருவதும் நானே பிரமமென்ற அத்வைத அனுபூதிக்குங் காரணம் நிஷ்காம கர்மமாகும். எவ்வுபாயங்களால் மோக்ஷமடையலாமோ அவ்வுபாயங்களெல்லாம் நிஷ்காம கர்மமாகும். நிஷ்காம கருமானுஷ்டானத்தின் கிரமலக்ஷணத்தை பின் கூறப்பட்டிருக்கின்றது.

4. **சித்த சுத்தி** : ஸ்தூல சரீரத்திற்கு **வாதம் பித்தம் கபம்** என்று மூன்று தோஷங்களெப்படியோ அதுபோல் சூக்ஷும சரீர கர்த்தாவான அந்தக்கரணத்திற்கு **மலம் விக்ஷேபம் ஆவரணம்** என்று மூவகை தோஷங்களுண்டு. அத்தோஷங்களிற் முற்கூறிய நிஷ்காம கர்மானுஷ்டானத்தால் மலதோஷம் நிவர்த்தியாம்.

**மலம்** என்பது அசுப காரியங்களை அடிக்கடி நினைப்பது.

**விக்ஷேபம்** என்பது ஒரு விஷயத்திலும் மனது ஸ்திரமாய் நிற்காமலங்கு மிங்குமலைவது.

**ஆவரண** மென்பது பிரமத்திற்கும் மனதிற்கும் மத்தியிலுள்ள ஓர் மறைவு அல்லது ஜீவாத்ம பரமாத்ம சம்பந்தமின்றியாக்கும் ஒரு சக்தி.

ஆதலால் முற்கூறிய சித்தசுத்தி பூரணமானதல்ல. மூவகைத் தோஷங்களையும் நிவர்த்தி செய்தால் மட்டுமே பூரணமான சித்த சுத்தியென்று சொல்லலாம். ஆனால் முற்கூறிய சித்த சுத்தியும் ஓர் வகைச் சித்த சுத்திதான். இச்சித்த சுத்தியால் கீழ்கூறும் சாதனங்களுண்டாகும்.



5. **நித்தியாநித்திய வஸ்து விவேகம்** : நித்திய வஸ்து இன்னது அநித்திய வஸ்து இன்னது என்று மகான்களாலும் வேதாந்த சாஸ்திரங்களாலும் பரோக்ஷமாயுறுதி வருவதே யாம் அதாவது ஆத்மா நித்தியம் அதையொழித்ததெல்லா மநித்தியம்.

6. **இகபரபோக விராகம்** : இவ்வுலகிலுள்ள மாதர் பொருள் வீடு நிலம் ஆடை உணவு வெற்றிலை சந்தனம் சங்கீதம் முதலிய சர்வபோகங்களிலும் இச்சரீர சகாமகர்மத்தால் வாராநின்ற சொர்க்கம் பிரம்மலோகம் முதலிய இடங்களிலுள்ள அப்ஸர ஸ்திரீகளிடத்தும் ரம்பை முதலான தேவமாதர்களிடத்தும் இன்னுமற்றுள்ள எல்லா வகைப் போகங்களிலும் யதார்த்தமான வெறுப்புத் தோன்றுதல்.

7. **சமாதி ஷட்சம்பத்தி** : சமம் தமம் சிரத்தை சமாதானம் உபரதி தீதிக்ஷை என ஆறு.

**சமம்** : உள் மனதாகிய அந்தக்கரணத்தை விஷயங்களினின்றுந் திருப்புதல்.

**தமம்** : புறமனதாகிய பஹிஷ்கரணங்களை அதனதன் வழியே விடாது தடுத்தல்.

**சிரத்தை** : வேத வாக்கியம் குரு வாக்கியம் இவைகளில் நம்பிக்கையும் வேதத்தினிடத்தும் குருவினிடத்தும் சிரத்தையோடிருத்தலுமாம்.

**சமாதானம்** : வேதாந்த சாஸ்திர தாத்பர்யங்களினிடத்தும் வேதாந்த அனுபவத்திலும் மனதை ஸ்திரமாய் நிறுத்தல்.

**உபரதி** : மாதர்களை மிகவும் வெறுத்தலும் எல்லாக் கர்ம நிவிர்த்தியும் குடும்ப விவகாரத்தைச் சுருக்கிச் செய்தலுமாம்.

**திதீக்ஷை** : பசி தாகம் சீதம் உஷ்ணம் சுகம் துக்கம் முதலியவைகளையுங் காமாதி பதின்மூன்று சித்தவிர்த்திகளையும் அடக்குதல்.

8. **முமுக்ஷுத்வம்** : முற்கூறிய மூன்று சாதனங்களும் பூர்த்தியான பின்பு தலையில் தீப்பிடித்தவன் தண்ணீரைத்

தேடுவதுபோலவும் அதிக பசியுடையவன் அன்னத்தை தேடுவது போலவும் நித்திய பரமானந்தத்தை அடைவதற்குண்டாகும் தீவிர இச்சையாம்.

9. **குரு தரிசனம்** : முற்கூறிய பரிபக்குவம் அமைந்துள்ள வர்க்குச் சந்தேக நிவிர்த்தி செய்து சாக்ஷாத்காரமடைவிக்க வேண்டி கடவுள் தானே பரமாசாரியராய் சொரூபங் கொண்டு வருவர். ஏனெனில் இத்துடன் சகுண நிர்க்குண ரூப உபாசனையைப் பூரணமா யனுஷ்டித்தால் முற்கூறிய விக்ஷேப தோஷமும் நிவர்த்தியாகும். அதனாலும் பாப புண்ணியங்கள் சமமாகும்போது ஜன்ம முடிவிலுங் குரு வருவாரென்றும் சொல்லலாம்.

**குரு லக்ஷணம்** : சர்வ வேதாந்த சாஸ்திர பண்டிதராயும் சர்வ மத சமரசராயும் உலகத்திலுள்ள 1500 மதங்களின் சாரமறிந்த வராயும் ஜீவகாருண்யம் பாச வைராக்கியம் உப சாந்தம் பிரம்ம நிஷ்டை எதார்த்த வாக்கு ஏகாந்த போகம் இவைகள் பொருந்திய வராயும் சர்வ உலக விவகாரமறிந்தவராயும் சர்வஜாதி குலம் சாஸ்திரம் தேசம் முதலியவைகளில் சமரசமுடையவராயும் சர்வசங்க பரித்யாக முடையவராயுமிருப்பவர் யாரோ அவரே குரு. அந்த குரு சன்னிதானத்தில் வேதாந்த சாஸ்திர தாத்பர்ய அனுபவங்களை யதார்த்தமா யறிந்துக் கொண்டபின் சமாதிக்கு ஆரம்பிக்க வேண்டும்.

10.**சிரவணம்** : ஷட்வித லிங்க தாத்பர்யங்களால் பிரம்ம சொரூபம் நானென்று பரோக்ஷமாய் நிச்சயித்து அன்ன மயம் பிராண மயம் மனோமயம் விஞ்ஞான மயம் ஆனந்த மயம் என்னும் ஐந்து கோசங்களையும் சுற்றி அதன் பின்புள்ள சூன்யாவஸ்தையையும் நீக்கி ஆத்ம திடத்துடனிருப்பதாம்.

**ஷட்வித லிங்கங்கள்**

1. உபக்ரமோபசம்ஹாரம் 2. அப்பியாசம் 3. அபூர்வதை 4. பலம் 5. அர்தவாதம் 6. உபபத்தி.

1. **உபக்ரமம்** : சிருஷ்டியின் ஆதியிலுள்ளதும் பிரம்மம் அல்லது எல்லாவற்றின் தொடக்கமும் அஃதாம்.



**உபசம்மாரம்** : சிருஷ்டிக்கு பின்பும் பிரம்மம் அல்லது எல்லாவற்றின் முடிவுமாம்.

2. **அப்பியாசம்** : அத்வைத அர்த்தத்தை அடிக்கடி சொல்வது. அதாவது ஓர் ஏழை தனது பிரயோசனமாகிய ஓர் அபிப்பிராயத்தை வெவ்வேறு வசனங்களால் வெளியிடுவதுபோல வெவ்வேறு யுக்திகளால் அத்வைத பிரம்மத்தை பிரதிபாதிப்பதாகும்.

3. **அபூர்வதை** : பிரம்மம் வேத பிரமாணங்களொழிந்த மற்று பிரமாணங்களால் அறியப்படுவதல்லவென்றும் ஆத்மாசுயம் பிரகாசமாயிருப்பதால் அன்னிய பிரமாணங்களின் உதவி வேண்டுவதல்லவென்றும் சொல்லப்படும்.

4. **பலம்** : அத்வைத பிரம்ம ஞானத்திற்கு சர்வ அனர்த்த நிவர்த்தியும் பரமானந்த பிராப்தியுமே பிரயோஜனமென்று சொல்லுவதாகும்.

5. **அர்த்தவாதம்** : பேத ஞானத்தின் நிந்தையும் அபேத ஞானத்தின் ஸ்துதியும் ஆகிய வாக்கியங்கள் அர்த்தவாதமாம்.

6. **உபபத்தி** : அத்வைத அர்த்தத்திற்கு அனுகூலமான திருஷ்டாந்தங்களைக் கூறுவதாகும். அஃதெப்படியெனில் மண்ணிற்கு மதிலுண்டான கடாதிகட்கும் பேதமில்லாதது போலவும் தங்கத்திற்கு மதனால் செய்யப்பட்ட ஆபரணங்களுக்கும் பேதமில்லாததுபோலவும் காரணமாகிய பிரம்மத்திற்கும் அதன் காரியமாகிய பிரபஞ்சத்திற்கும் பேதமில்லை என்று பிரதிபாதிப்பதாகும்.

11. **மனனம்** : சிரவணத்தால் நிச்சயித்த இடமுங் கடந்த நிலையில் பிரம்மாகார விருத்தியைத் திடப்படுத்துவதாகும்.

12. **நிதித்தியாசனம்** : முற்கூறியபோதம் பிரம்மாகாரமாய் இத்திருப்பதாகும். அனாத்மாகார விருத்தி சம்பந்தமின்றிய ஆத்மாகார விருத்தியையும் நிதித்தியாசனம் எனலாம்.

13. **சமாதி** : முற்கூறிய நிதித்தியாசனத்தின் பரிபக்குவ அவஸ்தையே சமாதி. மனது முதலான இந்திரிய சேஷ்டை

களுடைய ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களோடு கூடியிருந்தும் அவை களிற் பொருந்தாதிருந்த ஆத்மாவாகிய தன்னைத் தானே தரிசித்தலும் அல்லது விருத்தி நசித்தலும் அல்லது மனநிவர்த்தியும் அந்தக்கரணத்தை சமத்துவமான பிரம்மத்தில் சமப்படுத்துதலும் மனது விகாரப்படாது பிரம்ம மயமாய் நிலை பெறலும் சர்வ சங்கற்பங்களுமற்று உதயமாகிற சாந்தியும் சமாதியாகும். சவிகற்பம் நிர்விகற்பம் என சமாதி இருவகைத்து. சவிகற்பம் என்பது விகற்பத்தோடு கூடியது. நிருவிகற்பம் விகற்பத்தோடு கூடாதது. ஞாதாஞானஞேய ரூபத்திருபுடியோடு கூடிய பிரம்ம தரிசனம் சவிகற்பம். அல்லது சங்கற்பத்தோடு கூடிய ஆத்ம தெரிசனம். இந்த சங்கற்பமும் இருவகைப்படும்.

1. மகா வாக்கியானு சந்தானத்துடன் மனோவிருத்தியைச் சேர்த்தல் 2. அனு சந்தானத்துடன் சேராதிருத்தல். அதாவது உற்பத்தி ஸ்தானத்தை விசாரித்தல். இந்த இரண்டு வித சமாதி களுடைய பெயர்கள் 1. சப்தானுவித்தம் 2. சப்தானனுவித்தம். ஞாதுருஞாதாஞேய ரூபத்திருபுடித் தோற்றமில்லாத பிரஹ்மாகார விருத்தியாகிய போதத்தின் நிலையே நிருவிகற்பம் அல்லது பிரம்ம தரிசனமாகும். நிருவிகற்ப சமாதியும் இருவகைப்படும்.

1. சம்பிரக்ஞாத சமாதி 2. அசம்பிரக்ஞாத சமாதி.

அத்வைத பிரம்மாகாரமான அந்தக்கரணத்தில் பாவனா ரூபப் பிரக்ஞையோடு கூடிய பிரம்மா காரமே சம்பிரக்ஞாத சமாதி. பிரக்ஞையோடு கூடாததே அஸம்பிராக்ஞாத சமாதி. இதற்கு அத்வைத அவஸ்தான ரூப நிருவிகற்ப சமாதி என்ற பெயரும் உண்டு.

14. **நிஷ்டை** : முற்கூறிய பிரஹ்ம சொருபத்தில் லயமடைந்த மனோவிருத்தி பிரம்ம மயமாய்தானே பிரம்மமென்று அனுபூதி மயமாய் இருத்துவது அல்லது அவாங் மனோவகோசர நிலையான அவதியாகும். அல்லது ஆனந்தானுபவமுற்ற அத்வைதமுமாகும்.

15. **ஜீவன் முக்தி** : தேகாதி பிரபஞ்சங்கள் தோற்றிக் கொண்டிருக்கையில் பிரம்ம சொரூபமாய் நிலைத்தல் அல்லது ஆகாமிய சஞ்சிதங்கள் இரண்டும் நசித்துப் பிராரத்த மாத்திரம்



சேஷித்திருக்கு நிலையும் கடைசி ஜன்மத்திலுதித்த யதார்த்த ஞானானுபவத்தின் முடிவுமாகும்.

16. **விதேக முக்தி** : முற்கூறிய நிலைமையும் அதற்கப் பாலுண்டாகும் நிலையும் ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீர பேதங் களில்லாத சத்தாமாத்திர நிலையும் ஆகாமிய சஞ்சித பிராரத்த மென்னு மூவகையுமில்லாத அகண்ட நிலைமையும் சாந்த நித்ய புத்தசைதன்ய சாஸ்வத நிஷ்கள நிராலம்ப நிர்விஷய கைவல்ய அத்வைத சாக்ஷாத்கார நிலையும் ஆகும். இவ்வாறு பிரஸ்தானத்தி ரயத்தின் அருமையான கருத்துக்கெல்லாம் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டது.

**நிஷ்காம கர்ம அப்பியாசக் கிரமம்** : எந்தப் புண்ணியங்களைச் செய்ய நினைக்கிறோமோ அந்தக் கருமங்களின் பயனை அத்துவைத முறைப்படி பிரம்ம சொரூபத்தில் அர்ப்பணம் செய்ய வேண்டும். அதெப்படி யென்றால் அவரவர் குரு அருளிச் செய்த லக்ஷியத்தில் மனதை நிற்கச் செய்து நான் பிரம்ம சொரூபத்தினின்றும் அந்நியமானவனல்ல வென்று பாவித்து சாத்வீக தர்மத்துடன் மோக்ஷ இச்சையை மட்டும் எண்ணி வருணாச்சிரம தர்ம முறைப்படி புண்ணிய கருமங்களைக் கவனமாயியற்றி ஓம் தத் ஸத் என்னும் மூவகைப் பதங்களை மனதால் சங்கற்பித்து வாக்கினாலு முச்சரித்து கருமத்தின் பிரயோஜனத்தை பிரஹ்மார்ப்பணம் செய்ய வேண்டும். அல்லது தினம் மாலைப் பொழுதில் கைகால் முகம் மார்பு கழுத்து ஆகிய ஐந்து இடங்களையும் தண்ணீரால் சுத்தி செய்து நெற்றியில் திருபுண்டரமோ ஊர்த்தவ புண்டரமோ சந்தனத் திலகமோ திருநீறோ ஏதாவதொன்றணிந்து மனதில் யாதொரு விசாரமுமின்றி ஈஸ்வர தியானம் செய்துக் கொண்டு இரண்டு கைகளிலும் தண்ணீர் மோந்துக் கொண்டு வடதிசை நோக்கி நின்று கொண்டு இதுகாரும் எனது மனோவாக்கு காயங்களாற் செய்யப்பட்ட புண்ணிய கருமங்களின் பலன்களை யெல்லாம் ஈஸ்வரார்ப்பணம் செய்கிறேன் என்று நினைத்துக் கொண்டு அர்ப்பணம் செய்ய வேண்டும். இந்த அர்ப்பணஞ் செய்யும்போது ஆத்மஞானம் உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும்.

### சாதன சதுஷ்டய ஆப்பியாசிகளின் கிரமங்கள் :

நால்வகைச் சாதனங்களையும் ஒவ்வொன்றாய் ஆதி முதல் கிரமப்படி அனுஷ்டிக்க வேண்டும். அவற்றில் முதலாவது நித்தியா நித்தியவஸ்து விவேகம் என்னும் சாதனத்தைத் தினமும் ஒரு தரமாவது ஏகாந்தமான இடத்திலிருந்து தமது மனதில் முற்கூறிய சாதனானுபவம் வந்தெய்தியதா என்ற பார்க்க வேண்டும். அதாவது பிரமம் ஒன்று மட்டும் சத்தியம் என்றும் மற்றுமுள்ள ஜீவேஸ்வர ஜகத்தெல்லாமனித்திய மென்றும் எண்ணி மனதைத் திடஞ் செய்தல் வேண்டும். இவ்வாறு பல சமயங்களிலும் பற்பல விதமாயத்தானே ஆலோசித்துப் பார்த்தும் பிரபல வேதாந்த சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள அரிய விஷயங்களைப் பாராயணம் செய்தும் மனதை ஸ்திரப்படுத்துதல் வேண்டும். பின்பு பிரம்ம நிஷ்டை பண்டிதராகிய மஹான்களிடம் இந்த விஷங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும். எந்த மதஸ்தர் களாலும் மற்றோர்களாலும் பேதவாதக் கிரந்தங்களாலும் பிரமம் உண்டாய்ச் சந்தேகங்கள் உண்டாகாதிருக்கும்வரையும மனதை யதார்த்தத்திலிருந்து நீங்காத திடம் வருகிற வரையும் முற்கூறியபடி செய்துக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் இச்சாதனத்தின் முடிவு. பின்பு இகபரபோக விராகம் என்ற இரண்டாம் சாதனத்தை அப்யசிக்க வேண்டும். ஆதியில் சத்திய வஸ்து பிரமமென்றும் மற்றுள்ளவை யெல்லா மனித்திய மென்றும் உணர்ந்தபின்பு அனித்தியமான மாதர் பொருள் குடும்ப சுகம் முதலிய இகலோக போகங்களிலும் மனதுக்கு வெறுப்புண்டாக்கத் தக்க எண்ணங் களை யெண்ணி யெண்ணி எல்லா இச்சைகளையும் விட்டு மனதைத் திருப்பி ஆசாநிவர்த்தனாகி யிருக்க வேண்டும். இதுதான் இச்சாதனத்தின் முடிவு. பின்பு மூன்றாவதான சமாதி ஷட்சம்பத்தி யின் ஆறு குணங்களையும் ஒவ்வொன்றாய் அப்பியாசிக்க வேண்டும். இச்சாதனத்தின் முடிவு யாதென்றால் மனது யாதொரு விஷயங்களிலும் ஓடாதிருக்கும்படி ஓர் நிலையில் நிற்கும் வரை இந்திரியங்களோடா திருக்கும் வரையும் சர்வ கர்மங்களிலும் இச்சை உண்டாகாமலிருக்கிறவரையிலும் காமாதி விகாரங்களாற் பிணிக்கப் படாதிருக்கும் வரையும் தியான சிரவணாதிகளில் மனது ஏகாக்கிரப் படுகிறவரையும் சற்குருவினிடத்தும் வேதாந்த சாஸ்திரங்களிடத்



தும் அதிக விருப்பமுண்டாகிற வரையும் அப்யசிக்க வேண்டும். அதன்பின்பு மோக்ஷவிருப்பத்தைப் பழக வேண்டும். அதாவது மோக்ஷத்தின் சொரூபத்தை நன்றாயடிக்கடி விசாரித்து அதை அடைய வேண்டுமென்ற விருப்பமே முமுக்ஷுத்வமாகும். இந்த இச்சை வருவதுதான் நான்கு சாதனங்களின் பூரணமான அபிப்பிராயம் - இதில் சித்த சுத்தியாகிய மனம் என்ற பூமியில் நித்யா நித்திய வஸ்துவிவேகம் உற்பத்தியாகும். பின்பு இரண்டாவது நிராசையுண்டாகும். பின்பு மூன்றாவது சமாதிஷட் சம்பத்து உண்டாகும். பின்பு நான்காவது யதார்த்த மோக்ஷ விருப்பமுண்டாகும். இந்த நான்கும் ஒன்றுக்கொன்று சகாய முடையவைகள். இவ்விதமாகச் சாதன சதுஷ்டய அப்பியாசம் செய்யவேண்டும்.

### சமாதி அப்பியாசக்கிரமம்

முற் கூறப்பட்ட நான்கு சாதனங்களும் பூர்த்தியான பின்பு சமாதி அப்பியாசிக்க வேண்டும். அப்பியாச மாரம்பிக்குங் காலத்தில் சொற்ப ஆகாரமே உபயோகிக்க வேண்டும். அதாவது சரீரதாரணை யின் பொருட்டு ஆகாரமுட் கொள்ளலாம். சுக துக்க மனதிற் பற்றாதிருக்க வேண்டும். எப்போதும் மனிதர் சங்கமின்றி ஏகாந்த ஸ்தலத்திருக்க வேண்டும். தீர்த்த யாத்திரை தேச யாத்திரை இவைகள் செய்யக் கூடாது. பிரயோஜன மற்ற வார்த்தைகள் பேசக் கூடாது. அப்படியானல் வாக்கு மவுனம் சாதிக்க வேண்டும். சாத்வீக ஆகார மட்டுமே உபயோகிக்கலாம். அதாவது பால் புளிப்பற்றக் கனிகள் நெய் சேர்ந்த பதார்த்தங்கள் கோதுமைப் பண்டங்கள் கத்திரிக்காய் அவரைக்காய் நெல்லிக்காய் சேனைக்கிழங்கு சேம்பு வாழைத் தண்டு பலாக்காய் அருக்கீரை பச்சரிசி சிறுபயரு மற்றும் வியாதி யுண்டாக்காத பதார்த்தங்களையும் சரீரத்துக்கு உண்மையான தைரியத்தைக் கொடுக்கும் சாதனங்களையும் அறிவு ஆயுசு சுகம் இவற்றைக் கொடுக்கத் தக்கவைகளையும் சாப்பிடலாம்.

கொடிய பசியுண்டாகும் போதெல்லாம் அரை வயிறு அன்னமும் கால் வயிறு ஜலமும் (சாப்பிட்டால் ஒரு நாளைக்கு ஒரு வேளை) சாப்பிட வேண்டும். இது ஓர் குருவின் அபிப்பிராயம்.

அப்பியாசம் செய்பவர்கள் அதிகமாக நடக்கக் கூடாது. அதிக வேலை செய்யக் கூடாது. இரவை மூன்று பாகங்களாகப் பகுத்து முதற் பாகத்திலும் கடைப்பாகத்தில் விழித்திருந்து இடைப் பாகத்தில் உறங்க வேண்டும்.

**சாம்பவி பைரவி கேசரி** ஆகிய இம்முத்திரைகளை ராஜயோக அனுசரணமாக அனுஷ்டித்து வரவேண்டும். எப்போதும் வடதிசை நோக்கியே அப்பியாசிக்க வேண்டும். இது ஒரு நியமம். இன்ன திசையிலிருந்து அப்பியாசிக்க வேண்டுமென்று நியமமில்லை. எங்கெங்கிருந்தோமோ அங்கெல்லாம் அப்பியாசம் செய்யலாம்.

**பதுமம் சித்தம்** என்ற இரண்டு ஆசனங்களிலிருந்து அப்பியாசிக்க வேண்டும். அல்லது அவரவருடைய மனதுக்கு சுகமாகத் தோற்றுகிற ஆசனத்திலிருந்து அப்பியாசம் செய்யலாம்.

பொதுவாய் பகிரங்கமான கர்மங்களில் ஒரு நியமமுமவசிய மில்லை. இவ்விதமான நியமங்கள் இன்னும் அதிகமாக இல்லை. எதார்த்த ஞானத்தை அடைய வேண்டுமென்ற தீவிர இச்சையுடன் முடிவான ஜன்ம பிரார்த்தமுடையவருக்கு முற்கூறிய நியமங்களே போதுமானது. இனியும் சொல்வதானால் மிகவும் விரியுமெனக் கருதி சுருக்கி கூறினோம். இத்தகைய நியமங்களுடன் அவரவர் குரு உபதேசித்த முறைப்படி சமாதி அப்பியாசிக்க வேண்டும். இவ்வாறு அப்பியாசிக்கையில் உலகம் சில சமயம் உள்ளதாயும் சில சமயம் இல்லாததாயும் தோற்றும். பின்னும் அப்பியாசிக்கையில் பஞ்சேந்திரியங்களில் **ரூபம் ரஸம் கந்தம்** ஆகிய மூன்றும் இல்லாததாகும். அதாவது அடங்கி விடும். சவிகற்ப சமாதியில் **ஸ்பரிசம்** தோற்றாது. நிர்விகற்ப சமாதியில் அதாவது பிரஹ்ம தரிசனத்தில் **சப்தம்** அடங்கும். இந்த அனுபவங்களை அவரவரே அப்பியாசித்து அவரவரே கண்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு சமாதி அப்பியாசக் கிரமங்களுடன் இக்கிரந்தம் முடிவு பெற்றது.

ஓம் தத் ஸத்

தத்

ஓம் ஸத்

## மகாகுரு ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மா திருவாய்மலர்ந்தருளிய

# இந்தியா


| | |
|---|---|
| சமரஸமானதடி | எங்கள் இந்தியா |
| சாற்றுவதை கேளுங்கடி | எங்கள் இந்தியா |
| அமரர் திலகமடி | எங்கள் இந்தியா |
| அந்தரங்கமானதடி | எங்கள் இந்தியா |
| வடக்கே ஹிமயகிரி | எங்கள் இந்தியா |
| வாமன வைதரித்த | தெங்கள் இந்தியா |
| தெற்கே குமரியடி | எங்கள் இந்தியா |
| தீர்த்தங்களுள்ளதடி | எங்கள் இந்தியா |
| வடமொழியுந் தென்மொழியும் | எங்கள் இந்தியா |
| வாயாரச் சொல்லுமடி | எங்கள் இந்தியா |
| வேதாந்த தேசமடி | எங்கள் இந்தியா |
| விஸ்தார பூமியடி | எங்கள் இந்தியா |
| தூங்கி விழித்ததடி | எங்கள் இந்தியா |

துறத்தி யடிக்குமடி எங்கள் இந்தியா
சீதை பிறந்ததடி எங்கள் இந்தியா
ஸ்ரீராமராண்டதடி எங்கள் இந்தியா
பதிவிரதைக் கூட்டமடி எங்கள் இந்தியா
பார்த்தாவே தெய்வமடி எங்கள் இந்தியா
பாண்டியனாராண்டதடி எங்கள் இந்தியா
பற்றைத் துறந்ததடி எங்கள் இந்தியா
அதிக ஜனக்கூட்டமடி எங்கள் இந்தியா
ஐந்திலொரு பாகமடி எங்கள் இந்தியா
ஜடகோபர் சார்ந்ததடி எங்கள் இந்தியா
சங்கரர் பிறந்ததடி எங்கள் இந்தியா
பயமரதியற்றதடி எங்கள் இந்தியா
பாரதர்க்குச் சொந்தமடி எங்கள் இந்தியா
ஆழ்வார் பிறந்ததடி எங்கள் இந்தியா
அவதார தேசமடி எங்கள் இந்தியா
சாந்திபெறச் செய்வதடி எங்கள் இந்தியா
சைதன்யர் வாசமடி எங்கள் இந்தியா
ஜோதிமுடி கண்டதடி எங்கள் இந்தியா
சுகதேவர் போதபடி எங்கள் இந்தியா
புத்தரவ தாரமடி எங்கள் இந்தியா
பூரணத்தை கண்டதடி எங்கள் இந்தியா
பகவானை நம்பிவந்த தெங்கள் இந்தியா



பாசமதை யோட்டிவிடு மெங்கள் இந்தியா
திங்கள் கங்கைகொண்டதடி எங்கள் இந்தியா
தித்திரி யினுண்மையடி எங்கள் இந்தியா
மேல்மினுக்கை விட்டதடி எங்கள் இந்தியா
மெய்கண்ட தேசமடி எங்கள் இந்தியா
தூங்காமல் தூங்குமடி எங்கள் இந்தியா
துரியநிலை போதமடி எங்கள் இந்தியா
ஆலிலையிற் தூங்கியது மெங்கள் இந்தியா
அரிதுயிலாய மர்ந்தது மெங்கள் இந்தியா
அன்னியர்கள் குடிபுகுந்த தெங்கள் இந்தியா
அவரை விடவெண்ணுகின்ற தெங்கள் இந்தியா
எந்தவகை அரசர்களும் எங்கள் இந்தியா
எடுத்தெடுத்து மாளாதடி எங்கள் இந்தியா
வாழியெங்கள் தேசமடி எங்கள் இந்தியா
வாழி அடியார்களடி எங்கள் இந்தியா

-: ஓம் தத் ஸத் :-



சற்குரு பகவான்
ஸ்ரீ விலக்ஷணானந்தர்
சமாதி
ஜனனம் 11.1.1894
சமாதி 16.11.1945
SATGURUBHAGAVAN
SRI VILAKSHANANANDAR
SAMADHI
BORN.11.1.1894
SAMADHI 16.11.1945